Registered in Ceylon as a Newspaper ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 12 ஆம் நாள் துல்ஹஜ் 20 (25-5-62) வெள்ளிக்கிழமை இதழ் 103




# புதிய மேயர் யார்?

## 33,000 உணவுப்பொட்டலங்கள் தினசரி இலவச விநியோகம்

### கொழும்பு வெள்ள அகதிகளுக்கு

கொழும்பு, வியாழன்

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வீடுவாசல்களை இழந்து 50 அகதி முகாம்களில் தங்கியுள்ள வெள்ள அகதிகளுக்கு தருமக் கமிஷன் காரியாலயம் நேற்று காலையில் 16,500 உணவுப் பொட்டலங்களை விநியோகித்தது. நண்பகலிலும் இதே அளவு தொகையான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

இன்னும் 15 முகாம்களில் வீடுவாசல்களை இழந்தவர்கள் தங்கியுள்ளனர். இந்த முகாம்களில் சுமார் இரண்டாயிரம் மக்கள் தங்கியுள்ளனர்.

அகதிகளுக்கு உணவு வழங்குவதற்குமட்டுமே தருமக் கமிஷன் இலாகா இதுவரை 80,000 ரூபாய் செலவிட்டிருக்கிறது.

வெளத்தமுல்ல, நாரன்பிட்டி ஆகிய இடங்களில் வெள்ளம் வடிந்துவிட்டதென்றும் ஆனால் மகாவத்தை, மாளிகாவத்தை ஆகிய தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் வடிவதற்கு இன்னும் நான்கைந்து நாளாகலாமென்றும் தருமக் கமிஷனர் தெரிவித்தார்.

## "நான் வருவேன் பின்னே நன்கொடை வரும் முன்னே"

—கல்வி மந்திரி

காலி, வியாழன்

"இங்கு எனக்கு முன்னர் வந்துள்ள மந்திரிகளைப் போலல்லாது நான் இந்தத் தொகுதிக்கு வருமுன்னே பல பரிசுகளும் நன்கொடைகளும் அனுப்பிவிட்டே வந்திருக்கின்றேன்."

காலிப்பகுதியிலுள்ள மினிதுமத் தொகுதிக்கு உத்தியோக பூர்வமாக முதல் முதல் விஜயம் செய்த கல்வி ஒலிபரப்பு மந்திரி ஜனாப் பதியுதீன் மாமூத் யத்தலமத்த அரசாங்க பாடசாலையில் புதிய ஒரு கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

வழி நெடுக மந்திரிக்குக் கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இங்கு நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்திற்கு மினிதும எம். பி. திரு. ஹென்றி திஸ்ஸநாயக்கா தலைமை வகித்தார்.

கல்விமந்திரி மேலும் கூறியதாவது:

மற்றைய நாடுகளைவிட இலங்கை ஒரு சிறந்த நாடாகும். இலங்கையில் மட்டும்தான் இலவசக் கல்வியும் சிறந்த சுகாதார சேவையும் அளிக்கப்படுகிறது. இங்கே மட்டும்தான் அரசாங்கம் 1 கொத்து அரிசி ரூபா 1-12க்கு வாங்கி 25 சதத்திற்கு விற்கிறது. கிராமப்பகுதிகளில் கவனம் செலுத்துவதை அரசாங்கம் தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. இந்தியர்களால் நடாத்தப்பட்ட கருவாட்டு வியாபாரக் களவாடல் இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. கருவாடில்லாமல் மக்கள் என்ன இறந்தா போவார்கள்?

நாட்டின் முன்னேற்றத்தையே மக்கள் மனதிற்கொள்ள வேண்டுமென்றும், தம்தலைவரைக் கொன்றுவிட்டதனுல் தாம் மேற்கொண்ட பண்டாரநாயக்கா கொள்கையை எவருமே முறியடிக்க முடியாதென்றும் மேலும் பேசுகையில் மந்திரி பதியுதீன் மாமூத் கூறினர்.

வண. அமரவன்சநாயக்க தேரோ பேசுகையில் பதியுதீன் மாமூத்தின்றி வேறுயாராவது பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் விஷயத்தை மேற்கொண்டிருந்தால் நாடு இரத்தக்களமாக மாறியிருக்கும் என்ருர். இந்த ஒரு சாதனையே அவர் ஒரு பெரிய சிறந்த மனிதர் என்பதை நிரூபிக்கப் போதுமானது என்றும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

அக்மீமன எம். பி. திரு சமரசேகர உட்பட இன்னும் பலரும் பேசினர்கள்.

## வெள்ள நிவாரண நிதி உதவி!

கொழும்பு, வியாழன்

கொழும்பு தெற்குப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கினல் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொழும்பு மாநகரசபை உதவிய உணவுகள் பதங்கெட்ட நிலையில் இருந்த காரணத்தால் அம்மக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளார்கள். தமக்கு வழங்கப்பட்ட உணவுகள் பதங் கெட்டிருந்ததால் தாம் அவற்றை வீசவேண்டியிருந்ததாகப் பலர் கூறியுள்ளனராம். வேறு எதுவித உணவும் கிடைக்காத காரணத்தால் பழுதடைந்த அந்த உணவையும் தாம் உண்ண வேண்டியிருந்தாக வேறுசிலர் கூறியுள்ளனர்.

வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கும் பொறுப்பை தனிப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒருவரிடம் வழங்கியிருந்ததாகவும் உணவு வழங்குவதை அவர் சரியாக மேற்பார்வை செய்யவில்லை எனவும் மாநகரசபை அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

1947-ல் வழங்கியதுபோல பிரஸ்தாப மக்களுக்கு நிவாரண உதவிப் பணம் வழங்க வேண்டுமென அந்த அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா 5ரூபாய் வழங்க வேண்டும் என அவர் யோசனை கூறியுள்ளார்.

## தொலைபேசிக் கட்டணம்

கொழும்பு, வியாழன்

தொலைபேசி வைத்திருப்பவர்கள் பலர் தமது தொலைபேசிக் கட்டணக்களை வெகு காலமாகச் செலுத்த வில்லை எனத் தெரிகிறது.

கடந்த நவம்பர் மாதந்தொடக்கமாகத் தமது கட்டணத்தைச் செலுத்தாமலும் பலர் இருக்கிருர்கள்

கட்டணஞ் செலுத்தத் தவறிய பலருக்கும் பல தடவைகள் அறிவித்தல் அனுப்பப்பட்டதென்று தபால், தந்திப் பகுதி அதிகாரி யொருவர் கூறியுள்ளார். அறிவித்தல்கள் அனுப்பப்பட்ட போதிலும் இவர்கள் அக்கறை யெடுக்க வில்லையெனத் தெரிகிறது.

## பிரத்தியேக பொலிஸ்படை

கொழும்பு, வியாழன்

உல்லாசப்பிரயாணிகளுக்கெனப் பிரத்தியோக பொலிஸ் படையொன்று வெகு விரைவில் நிறுவப்பட விருக்கிறது.

உல்லாசப் பிரயாணிகள் பராமரிப்பு சபையினரும் பொலிஸ் இலாகாவும் கூடிய மகாநாடொன்றில் இவ்வாறு தீர்மானஞ் செய்யப்பட்டுள்ளது.

பிரயாணிகளுக்குப் பாதுகாப்பளிப்பதில் மட்டும் இந்தப் படை சேவையாற்றும். வெளியூர் பிரயாணிகளிடமிருந்து காசோலைகளைக் கொள்ளலாப விலைக்கு வாங்கிக்கொள்பவர்கள் பற்றி இப் பொலிஸ் படை எச்சரிக்கையாக விருக்கும்.

## மனிதரை விழுங்கும் சிறுத்தைப் புலிகள்

பகல்பூர், மே 24

பகல்பூரிலுள்ள காட்டுப் பகுதிகளில் மனிதரைக் கொன்றுவிழுங்கும் சிறுத்தைகள் உலவுகின்றனவாம். காட்டுக்கு வேட்டையாடச் செல்பவர்களுக்கு இப்புலிகளைக் கொல்லுவதற்கெனக் கண்ணீர்ப்புகைவெடிகளும்டைனமைட் வெடிகளும் வழங்கப்பட்டுள்ளன.

சிறுத்தைப்புலிகள் இதுவரை சுமார் 350 பேரைக் கொன்றிருக்கும் என பகல்பூர் வாசிகள் கூறுகின்றனர். சிறுத்தைகளைக் கொல்லுவதற்கான உபகரணங்களை வழங்கி அவற்றை ஒழித்துக்கட்டுவதற்கென அங்கு சில வேட்டைக் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறத.

## மேயர் தெரிவில் அங்கத்தவர் சுறுசுறுப்பு

### சுல்தானுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண நகரின் புதிய மேயர் தெரிவு இம் மாதம் 28-ம் திகதி நடைபெறவிருக்கிறது. புதிய மேயர் யார்? என்பதே இப்பொழுது மாநகரசபைவட்டாரங்களில்அடிபடும்பேச்சாகவிருக்கின்றது.

இருகோஷ்டியாகப் பிரிந்து நிற்கும் மாநகரசபை அங்கத்தவர்களில் எந்தக் கோஷ்டியையும் சேராதவராசக் கருதப்படும் காதி எம். எம். சுல்தானுக்கு ஆதரவு அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

மாநகரசபை கலைக்கப்பட மாட்டாதென்பது இப்பொழுது உறுதியாகத் தெரிந்துவிட்டதால் புதிய மேயர் தெரிவில் அங்கத்தவர்கள் இப்பொழுது அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர்.

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கத்தையும் புதிய மேயர் தேர்தலில் நிறுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதேசமயம் இருகோஷ்டியினருக்குமிடையில் சமரசம் செய்துவைக்கும் முயற்சியும் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

## அல்ஜீரியாவில் 38 பேர் பலி

அல்ஜியர்ஸ், மே 24

அல்ஜீரியாவில் நேற்று நடைபெற்ற பாலாத்கார சம்பவங்களில்38 பேருக்குமதிகமானோர் கொல்லப்பட்டனர்.

## சனசமூகநிலைய கோஷ்டி வெற்றிபெற்றது

புங்குடுதீவு, வியாழன்

பெருங்காடு சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் ஈவினைபிளையிங்டப்பிங் ஸ்போட்ஸ கிளப் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பெருங்காடு சனசமூகநிலையக்கோஷ்டி வெற்றியீட்டியது.

## நோய் மாறுமுன்பே வெளியேறினராம்

### யாழ்ப்பாணம் தொற்றுநோய் ஆஸ்பத்திரி பற்றி புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத் தொற்று நோய் சிகிச்சை நிலையம்பற்றிய ஒரு பிரேரணையை உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிருர்.

திரு. துரைராஜசிங்கம் முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணை வருமாறு:-

"யாழ்ப்பாணத் தொற்று நோய் சிகிச்சை நிலையத்தில் தொற்று நோயாளர்களின் தொகை மிகக்குறைவாக இருந்தபொழுதிலும் அந்நோயாளர்கள் பலரின் நோய்கள் முற்ருகக் குணமடைவதற்கு முன் அவர்களை ஆஸ்பத்திரி அதிகாரிகள் ஆஸ்பத்திரியிலிருந்து பலவந்தமாக அவசரப்பட்டு, வீட்டுக்கு அனுப்பிவிடுகிருர்கள். இதனுல் அரைகுறையாகத் தொற்று நோய் மாறியும் மாருதவர்களுமாக உள்ள பலருக்கு இந்நோய்கள் கடுமைப்படுத்தி அவர்களுடைய உயிருக்கே உலை வைப்பதுடன், இந்நோயாளர்களுடன் சம்பந்தப்பட்டவர்களையும், அப்பகுதி வாழ் மக்களையும் காட்டுத் தீ போல் பரவி தொற்று நோய்க்கிரையாக்கிக் கொண்டிருக்கவும் ஏதுவாக இருக்கும் யாழ்ப்பாணம் தொற்று நோயாளர் சிகிச்சை நிலைய அதிகாரிகளின் போக்கை இச்சபை வன்மையாகக் கண்டிப்பதுடன் இத்தகைய கவலையீனமான- அக்கறையற்ற செயல்கள் மீண்டும் நடைபெருது தடுக்கவேண்டிய நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் அதிபர் எடுக்கவேண்டுமென்றும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது."

உடுவிலைச்சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியம் என்பவர் தாம் சரியான குணமடையுமுன்னரே

(5-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

நல்ல நிலையில் நடைபெறும் எமது ஸ்தாபனத்தில் உற்பத்தி செய்திருக்கும் நாளாந்த பாவனைக்குரிய பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய வான் சேல்ஸ் மென்களும், பைசிக்கில் சேல்ஸ்மென்களும், கன்வெஸ்சர்களும், தையல் வேலையில் நல்ல அனுபவமுள்ள பெண்களும், தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர்களும்(பெண்கள்) பலபாகங்களுக்கும் கிளை அதிகாரிகளும் உடன் தேவை. 10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும்.

யோகா டிஸ்ரிபியூடேஸ், 3-ம் கட்டை ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15 50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் Catalogue) இலவம்.

வைத்தியர் பரிபூரணநந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி. யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

மானிப்பாயில், வீடமைப்பு இலாக்கா, கடன் அனுமதிக்கதகுதியான, பத்து பரப்பு, கட்டிட-காணி விற்பனைக்கு இருக்கிறது. யாழ்ப்பாண நகரை அடுத்துள்ள சிறு சொத்துக்கு எதிராக மாற்றிக்கொள்ளவும் முடியும். மனுச் செய்க. க. நடராஜா, காணி-சொந்தக்காரர், 271, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### காரைநகர் வியாவில் ஐக்கியபண்டகசாலைக்கு முகாமையாளர் ஒருவர் தேவை

வயது 21க்கும் 50க்குமிடையிலும் தமிழ்,கணக்கு அறிவுள்ளவராயும், வியாபார அனுபமுள்ளவராயும் இருத்தல் வேண்டும். சம்பளம் மாதம் 80ரூபாவாகும். பிணைப்பணம் ரொக்கமாக 500ரூபாவும், ஆதனப்பிணை 1000 ரூபாவும் கட்ட வேண்டும். விண்ணப்பம் அனுப்புவோர் 10-6-62 க்கு முன் காரியதரிசிக்கு தபால் மூலம் மனுச்செய்யவேண்டும்.அ தேவராசா, கௌரவகாரியதரிசி.


## கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணத்தில் கிரிக்கட் விளையாட்டின் தரத்தை உயர்த்தவும், கிரிக்கட் விளையாடுபவர்களுக்கும் கிரிக்கட் ஆதரவாளர்களுக்கும் நல்ல மத்தியஸ்தர்களை அளிக்கவும் மேற்கூறிய சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கிரிக்கட் விளையாடும் சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் கிரிக்கட் விளையாட்டின் நுணுக்கங்களையும் சட்டதிட்டங்களையும் பயிற்று விப்பது இச்சங்கத்தின் நோக்கமாகும்.

இச்சங்கத்தில் இருக்கும் அங்கத்தவர்களுக்கு மாதமொரு முறை பரீட்சை நடாத்தி மத்தியஸ்தர்களின் திறமையை மேலோங்கச் செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முதல் முறையாக ஆனி மாதம் 3-ந் திகதி இப்பரீட்சை நடாத்தப்படும். இம்முதற் பரீட்சைக்கு சுமார் ஐம்பது அங்கத்தவர்கள் தோன்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'திண்ணிய நெஞ்சமும் தெளிவான உள்ளமும் வேண்டும்'

## குரும்பசிட்டியில் திரு. இளந்திரையன் பேச்சு

மாவிட்டபுரம், வியாழன்
"பண்டைத் தமிழரின் வாழ்க்கையை இன்று நாம் கைக்கொண்டு வாழ்வோமானால் நமக்கு இன்று இத்த கையநிலை வந்திருக்காது. நாம் வாழ்க்கையில் எல்லாவற்றையும் துறந்துவிட்ட எண்ணத்தில் வாழ்கின்றோம். திண்ணிய நெஞ்சமும் தெளிவான உள்ளமும் கொண்ட ஒருவனை ஒன்றும் செய்துவிட முடியாது".

இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் விசேஷ பொதுக்கூட்டத்தில் டில்லிப் பல்கலைப் போராசிரியர் திரு. சாலை. இளந்திரையன் 'சங்கம் தந்த தமிழ்' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இளந்திரையன் மேலும் கூறியதாவது:-

சங்கத்தமிழ் அங்கங்கே இனிமையைத் தொட்டுக்காட்டுகிறது. சங்கத்தமிழின் உயர் செய்திகளை எண்ணும்போது நமது தலைநிமிருகிறது. சான்றோர்களுடைய நிலை, அகம், புறம் என இருவகைப்பட்டுகிறது. அகமான குடும்ப வாழ்க்கை இணைந்த உள்ளங்களைக் கொண்டது. அவர்களின் காதல் என்பதனை இன்றுள்ள காதலுடன் ஒப்பிடுதல் கூடாது. முன்னோர்கள் கையாண்ட உயர்ந்த சொற்களை இன்றுள்ளவர்கள் தாழ்வாகப் பயன்படுத்தக்கூடாது. ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள தொடர்பை எண்ணுகையில் எமது உள்ளத்தில் உயர்ந்த நெறி உண்டாகின்றது.

நல்ல வளமான மண்ணில் நீர்பாய்ச்சினால் அந்த நீர் நிலத்துடன் இரண்டறக்கலந்துவிடும். இறைவனுடன் உயிர்கள் இடண்டறக கலந்த நிலையே காதல்நிலை. இதனையே பின்வந்த அடியார்கள் பக்தி நிலையாக உருவாக்கினர். இந்த பக்திநிலையை இரு உள்ளங்களின் இணைப்பு மூலம் காட்டுகிறது சங்கத் தமிழ். உள்ளப் பிணைப்பின் வாழ்க்கையை நாம் உணர்ந்து கொண்டோமானால் சண்டை சச்சரவுக்கே இடமில்லை. இலக்கியத்தின் பயன் பண்புப் பொருளில் தோயவேண்டும். இலக்கியத்தை இலக்கியத்துள் ஆழ்ந்து படிப்பவர்தொகை இன்று குறைவு. நாம் மற்றவர்களுக்காக நமது இன்பத்தைவிட்டுக் கொடுத்துவிட்டோமானால் இந்தநிலை தானே வந்தெய்தும். இலக்கியம் நெஞ்சை உருக்குகிறது. இலக்கியத்தில் ஆணும் பெண்ணும் வாழ்வதனை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தமிழர்கள் புறவாழ்க்கை வாழ்ந்தமையினாலேதான் அஞ்சா நெஞ்சமும், உள்ளத்திண்மையும் நிறைந்தவர்களாக வாழ முடிந்தது. திருநாவுக்கரசு நாயனார் 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்' என்று குறிப்பிடுவதே இதற்கு எடுத்துக்காட்டாகும். அஞ்சாமைப் பண்பும், அன்பு நெஞ்சமும் வந்தது தமிழ் நெஞ்சங்களிலேதான். இந்த உள்ளம் வரக் காரணம் அவர்கள் தமக்காக வாழாது பிறருக்காக வாழ்ந்தமையே. தமிழிலே கிடந்து ஊறிவிட்டால் நம்மைத் துன்பம் அணுகாது. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரின் குறளின் உண்மையை அனுபவிக்கலாம். சான்றோர்கள் பிறருக்காகவே வாழ்ந்தனர். மற்றவர் துன்பம் கண்டு அவர்கள் நெஞ்சம் உருகியது."

திரு. கனக. செந்திநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தென்னிந்திய எழுத்தாளர்களுக்கும் இலங்கை எழுத்தாளர்களுக்குமிடையே தொடர்பு உண்டு. ஈழநாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்களை நன்கு படித்து உணர்ந்து கொண்டவர் இந்தியாவில் மிகச் சிலரே. திரு சாலை. இளந்திரையன் இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகளை நன்கு படித்துள்ளார். இங்குள்ள எழுத்தாளர்கள் படைக்கும் கிராமியச் சூழலிலான கதைகளை இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் ஆதரித்தால்தான் அவற்றை இந்திய மக்கள் உணர்த்துகொள்ள முடியும்.

கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை தமது தலைமையுரையிற் குறிப்பிட்டதாவது:

"இந்தியாவிலே கம்பராமாயணத்தை இந்தி மொழியில் பரப்பியவர் தமிழ்மகனை குமரகுருபரரே. ஈழகேசரிப் பொன்னையா இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஒரு பாலமாக விளங்கியிருக்கிறார்.

டில்லி திருவேங்கடவன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியை திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன் 'பண்பாட்டின் சிகரங்கள்' என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டதாவது:-

பண்பாடு, கலைகளினால்தான் நாம் முன்னேறுகிறோம் என்று சொல்லுகிறோம் நெல்லை விதைக்குமுன் நிலத்தைப் பண்படுத்துவார்கள். அதுபோல நல்ல உள்ளத்தை வளரச்செய்ய வேண்டுமானால் உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். உள்ளத்திலுள்ள மாசு, மறுக்களை நீக்கி விடுவோமானால் நமது உள்ளத்தில் நல்ல சிந்தனைகள், கருத்துக்கள் வேரூன்ற முடியும்.

## தீவுப்பகுதி . . . .

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றக் காரியதரிசி):- இப்பிரேரணைமீது பேசும் எவரையும் நிறுத்துவதற்கு நான் குறுக்கிடவில்லை. ஆனால் இப்பிரேரணையைக் கொண்டுவந்திருப்பவருக்கு ஒன்று இரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தவாரம் பூராவும் சிநேகபான்மையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் சபை அலுவல்கள் நடைபெற்று வந்திருக்கின்றன.

இப்பிரேரணையைக்கொண்டு வந்திருக்கும் பிரதிநிதியுடைய தேர்தல் தொகுதியில் இப்பிரச்சினைகள் இருப்பது உண்மைதான். இந்தத்தீவில்வாழும் மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கம் அறிந்துள்ளது. ஆனாலும் இரண்டொரு விஷயங்கள் பிரச்சினைகளைக் கிளப்பாமலில்லை.

நடைமுறையிலிருந்துவரும் மோட்டார் போக்குவரத்துச் சட்டம் நீரில் போக்குவரத்தை நடத்துவதற்கு வசதியளிக்கவில்லை. அதற்கான வசதியளிக்கக்கூடிய முறையில் ஷரத்துக்களும் கிடையாது. இந்தப் பிரச்சினை குறுக்கிட்டபடியினால் தான் அரசாங்கம் மராமத்து இலாகாவின் உதவியை நாடியது.

மராமத்து இலாகா திறமை வாய்ந்தது என்று, நான் கூறவில்லை. அநேக தடவைகளில் 'லோஞ்ச்' போக்கு வரத்து ஸ்தம்பித்து விடுகிறதென்று பிரதிநிதியவர்கள் கூறியதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இதனால் எப்படித்திறமையான முறையில் போக்குவரத்தை நடத்தமுடியும் என்பதைத் தான் நாம் கண்டு பிடிக்க வேண்டும். சட்டத்தை மாற்றியமைத்து போக்குவரத்தைச் சீராக்க வேண்டும். தீவுகளில் வாசிக்கும் மக்களுக்கு சீரான போக்குவரத்துச் சேவையை எப்படி வழங்குவதென்பதைக் கண்டு பிடிக்கவேண்டும்.

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்

சுபகிருதுஆண்டு, வைகாசித் திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை(25-5-62) ஹிஜ்ரிஆண்டு துல்ஹஜ்மாதம் 20ம் பிறை.

இன்று பகல் 2-39 வரை ஷஷ்டி. பின்னர் ஸப்தமி.மாலை 4-13வரை திருவோணம்.அதன் பின்னர் அவிட்டம். மாலை4-10 வரை மரணயோகம். இன்று புதிதாக எதிலும் தலையிடாது பகவத் பிரார்த்தனை செய்க. இராகுகாலம் 10-22 முதல் 11-52 வரை.

திருவோணம், அவிட்டம்,சதயம், பூரட்டாதி,உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இன்று இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

திருவோணம் - அவிட்டம்:- வைத்தியச்செலவு, மாதுருவழி உதவி, தொழிற்சிறப்பு, பொருள்வரவு.

மேடம்: நண்பர் உதவி, விவகாரவெற்றி' பணவரவு, உறவினர் வரவு.

இடபம்: குடும்ப ஒற்றுமை, நண்பர்கொண்டாட்டம்,செலவு, போசனசுகம்.

மிதுனம்: சுபகரும முயற்சி. இனசனகொண்டாட்டம், பெரியோர் ஆதரவு, தொழில் நன்மை.

கடகம்: ஆடம்பரச் செலவு, மாதரால் தொல்லை, நண்பர் ஆதரவு, கடன்வரவு.

சிங்கம்: வீண்யோசனை,மனச்சஞ்சலம், கடன்தொல்லை,வீண்பகை.

கன்னி: பெரியோர் தரிசனம், செய்காரிய வெற்றி, நண்பர் சேர்க்கை, செலவு.

துலாம்: தொழில் மேன்மை, தருமவழி சிந்தனை, சகோதரர் உதவி, பணவரவு.

விருச்சிகம்: வீண் செலவு, இனசனத்தொல்லை, போசனக்கஷ்டம், பகை.

தனு: மனத்திடம், உழைப்புப்பலிதம், பகைநீக்கம்,மாதாவழிஉதவி

மகரம்: குடும்பநன்மை, மாதுருவழி பணவரவு, தெய்வவழிபாடு, தார்மீக செலவு.

கும்பம்: குடும்ப ஒற்றுமை, சகோதரர்உதவி, பிரயாணம், மதிப்பு.

மீனம்: நம்பிஏமாறல், பெரியோர் நட்பு, வர்த்தகநலம், தொழில் மந்தபலன்.

## ஸ்ரீதரின் நன்கொடை

'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தின் நூறுவது நாள் விழாவின்போது அடையாறு புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு ஸ்ரீதர் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினர்.

# சமய சுதந்திரமும் பறிபோய் விடும்!

## வள்ளுவர் விழாவில் சாவகச்சேரி எம். பி.

சாவகச்சேரி, வியாழன்
"தேசியம் தேசியம் என்று கூறிக் கொண்டு ஆட்சியாளர் எல்லா உரிமைகளையும் கைப்பற்றி வருகின்றனர். அந்நியர் ஆண்ட காலத்தில் தமிழர் பெற்ற சுதந்திர வாழ்க்கையில் எத்தனையோ பங்குகள் தேசியம் என்னும் பசுத்தோல் போர்த்த புலியால் பிடுங்கப்பட்டுவிட்டன. இப்புலி கடைசிப்பிடியாகப் பிடிக்கப்போகும் கழுத்துப்பிடி இலங்கையில் ஒரே சமயம் என்பதுதான். அச்சமயம் புத்தசமயம். இதை நான் உற்பாதமாய் உங்களுக்குத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் திருநாளில் சொல்லி வைக்க விரும்புகிறேன். இதை உங்கள் நாட்குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள்."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரிச் சைவசமய வளர்ச்சிச் சங்க ஆதரவில் செருக்கல் பிள்ளையார்கோவில் வீதியில நடைபெற்ற திருவள்ளுவர் விழாக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஐ. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியை திருமதி ஐயாத்துரை மீனம்மா, திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டிய வள்ளுவரின் அறநெறிகளை எடுத்துரைத்தனர்.

கொள்கையளவில் அங்கத்தவருடைய பிரேரணையை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. கஷ்டங்களை எப்படிப் போக்குவது என்பது பற்றி தீர்க்கமாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கெண்டிருப்பதையிட்டு அங்கத்தவர் பெருமைப்படவேண்டும்.


★ "டல்மியா" சிமேந்து BSS 12/1958 பிரமாணத்துக்கேற்ற வகையில் செய்யப்பட்டது.
★ ,, பைப்புக்கள், பைப்பு உபகரணங்கள்.
★ ,, நெருப்பினால் பாதிக்கப்படாத செங்கல்.
★ ,, நெருப்பினால் பாதிக்கப்படாத களிமண்

ஆகியவை எம்மிடமுண்டு.

விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

**செட்டிநாடு கார்ப்பரேஷன் பிரவேட் லிமிட்டெட்**

116, 118. கெய்ஸர் வீதி, கொழும்பு.

234,70,50,925 வருடங்களின் பின்

# பரணி நட்சத்திரத்தில் ‘கிஷா’ வருடத்தில் உலகம் அழியும்

ஹைதராபாத்,

உலகத்தின் வயது 431,82,72,000 ஆண்டுகளெனவும், இதுவரை 197,12,21,075 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டனவென்றும் வாங்மய, மத்தியாடி திரு. வட்லமுடி கோபாலகிருஷ்ணயா அண்மையில் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் 234,70,50,925 ஆண்டுகளின் பின்னரே உலகம் அழியும் எனவும் அவர் கூறியிருக்கிறார். உலக ஆரம்பத்திற்கும், வானமண்டல சாஸ்திரத்திற்குமிடையிலுள்ள தொடர்பைக் கடந்த ஆறு ஆண்டுகளாக ஆராய்ந்த பின்னர் இம்முடிவை இவர் வெளியிட்டிருக்கிறார்.

பழைய முனிவர்கள் வேதங்களிலே 197,12,21,075 ஆண்டுகளுககு முன் வானமண்டல ஆராய்ச்சி பற்றியும் அதன் பூமித் தொடர்புபற்றியும் சில இரகசியங்களை எழுதி வைத்துள்ளனர். உலகம் மேற்குறிக்கப்பட்ட ஆண்டுகட்கு முன் “பிரபவா” ஆண்டில் ‘கிரித்திக’ நட்சத்திரத்தின் ஆட்சியில் ‘சைத்திர’ மாதத்தில் ‘சுக்கில்ய பத்யமி’ சந்திரனின் இரண்டாவது கிழமை முதல் ஞாயிறில் உதயமானது என்று அம்முனிவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவர்கள் கூறுவதற்கும் உலகம் 200 கோடி ஆண்டுகட்கு முன்னர் ஆரம்பித்தது என்று திரு. ஜேம்ஸ் ஜீன்ஸ் கூறுவதற்குமிடையில் மூன்று கோடி ஆண்டுகளே வித்தியாசமுள்ளன.

இன்னும் 234,70,50,935 ஆண்டுகளுக்குப் பின் பரணி நட்சத்திர ஆட்சியின் கீழ், ‘கிஷா’ வருடத்தில் ‘வலகன்’ மாதத்தில் சனிக்கிழமை பூரணையன்று உலகம் அழியும் என்று கோபாலக்கிருஷ்ணயா கூறியிருக்கிறார்.

# ‘அமெரிக்க உதவி குறைந்ததால் கொள்கை மாறாது’
## டெலிவிஷன் பேட்டியில் இந்தியதூதர் நேரு பதில்

நியுயோர்க், மே 24

“இந்தியாவுக்கு அளிக்கும் உதவித் தொகையை அமெரிக்க வெளி உறவுக் கமிட்டி குறைத்து விட்டதால் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாறுதல் ஏற்படப் போவதில்லை” என்று அமெரிக்காவிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. பி. கே. நேரு நேற்று டெலிவிஷன் பேட்டியொன்றில் பேசுகையில் கூறினர்.

அதிக உதவி பெறுவதற்காகக் கொள்கையை மாற்றிக் கொள்வதாகவிருந்தால் அதிக உதவி கொடுக்கும் நாட்டுக்கு இந்தியா தனது கொள்கையை விற்றுவிட்டதாகவல்லவா முடியும்! என்று திரு. நெரு கூறினர்.

இருதரப்பாரிடமிருந்து (அமெரிக்கா-ரஷ்யா) இந்தியா அதிக தொகை உதவியாகப் பெற்றிருக்கிறதல்லவா? என்ற ஒரு கேள்விக்கு திரு. நேரு பதிலளிக்கையில் கூறியதாவது:-

இருதரப்பாரிடமிருந்து இந்தியா பெற்றுள்ள தொகையை மக்கள் தொகையுடன் கணித்துப் பார்த்தால் மிகவும் குறைவுதான். இந்தியா பெற்ற தொகையைவிட அமெரிக்காவிடமிருந்து அதன் கூட்டு நாடுகளும் ரஷ்யாவிடமிருந்து அதன் கூட்டு நாடுகளும் அதிக உதவி பெற்றிருககின்றன.

மற்றொரு கேள்விக்கு திரு. நேரு பதிலளிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

காங்கோவில் நெருக்கடியேற்பட்டதும் ஐ. நா.வின் கோரிக்கையை ஏற்று அங்கு இந்தியா உடனடியாகத் தனது துருப்புக்களை அனுப்பியதால் அமெரிக்கரின் உயிரையும் அமெரிக்காவின் பணத்தையும் பாதுகாத்தது. காங்கோவில் அமெரிக்கரின் உயிரையும் பணத்தையும் இந்தியா பாதுகாக்காமல் விட்டிருந்தால் எவ்வளவு பணம் அமெரிக்காவுக்குச் செலவு ஏற்பட்டிருக்குமோ அதைவிடக் குறைவான பணம் தான் இந்தியாவுக்கு அளிக்கப்படவிருந்த நிதியிலிருந்து இப்பொழுது ‘வெட்டியெடுக்கப்பட்டுள்ள’ தொகையாகும்.

சோவியத் யூனியனிடம் போர் விமானங்கள் வாங்க இந்தியா உத்தேசித்துள்ளது பற்றிய ஒரு கேள்விக்கு திரு. நேரு பதிலளிக்கையில் சோவியத் யூனியனிடம் இந்தியா போர் விமானங்களை வாங்கும் விஷயம் இறுதியில் நடைபெறுமா? நடைபெறாதா என்பது இப்பொழுது முடிவு சொல்ல முடியாத விஷயமென்றார்.

“என்றாலும் பாகிஸ்தானைவிட இந்தியாவின் எல்லையில் ஆபத்தான ‘நண்பர்கள்’ உள்ளனர். எனவே இந்தியா தனது பாதுகாப்புக்குப் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். தனது படைகளுக்கு புதிய சாதனங்களை இந்தியா வாங்கவேண்டியது அவசியம். எந்த நாட்டில் இவை மலிவாகக் கிடைக்கிறதோ அங்கு நாங்கள் வாங்குவோம். அதில் தவறொன்றுமில்லை” என்று திரு. நேரு கூறினர்.

பாகிஸ்தான் பற்றிய ஒரு கேள்விக்கு திரு. நேரு பின்வருமாறு கூறினர்:-

பாகிஸ்தானுடன் எங்களைச் சமமாக வைத்துப் பேசுவது எங்களுக்குச் சற்றும் பிடிக்காத விஷயம். பாகிஸ்தானைவிட எங்கள் நாடு ஐந்து மடங்கு பெரியது. அந்த நாட்டைவிட எங்களுக்குள்ள பிரச்சினைகள் பெரிது.

கோவாமீது படை நடவடிக்கை எடுக்க கிருஷ்ணமேனன் தானே காரணம்? என்ற ஒரு கேள்விக்கு திரு. நேரு பதிலளிக்கையில் “கோவா, இந்தியாவின் ஒரு பகுதி. இதற்கும் கிருஷ்ணமேனனுக்கும் என்ன தொடர்பு?” என்று கேட்டார்.

---

### அயூப்கான்

கராச்சி, மே 23

கிழக்கு பாகிஸ்தான் நிலைமை பாகிஸ்தான் ஜனதிபதி அயுப்கானுக்குத் தொல்லையை அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது. கிழக்கு பாகிஸ்தான் விஷயமாக பாரபட்சம் காட்டப்படுவதாய் புகார் கூறப்பட்டுவருகிறது.

### சலானுக்கு ஆயுட்கால சிறை!

பாரிஸ், மே 24

அல்ஜீரிய இரகசிய ராணுவ ஸ்தாபனத்தின் தலைவரும் முன்னாள் பிரஞ்சு ஜெனரலுமான சலானுக்கு பிரஞ்சு ராணுவ நீதிமன்றம் நேற்று ஆயுட் காலசிறைத் தண்டனை விதித்தது. சலானுக்கு மரணதண்டனை வழங்க வேண்டுமென்று கோரி முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் இரண்டுமணி நேரம் வாதாடினர்.

### ‘பாகிஸ்தான் செய்தி பொய்’
#### டில்லியில் மறுப்பு

ஸ்ரீநகர் மே 24

காஷ்மீரில் ஓய்வெடுத்து வரும் பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு மேலும் இரு தினங்கள் அங்கு தங்கி இருப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.

ஜம்முகாஷ்மீர் பிரதமர் பக்ஷிகுலாம் முகமத்துடன் ஸ்ரீ நேரு நேற்று நீண்ட நேரம் பேசினர்.

ஸ்ரீநகரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு ஸ்ரீ நேரு சென்றதாகவும் அங்கு கறுப்புக்கொடி ஆர்பாட்டம் நடைபெற்றதாகவும் பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்து பலரைக் கைது செய்ததாகவும் பாகிஸ்தான் ரேடியோ ஒலிபரப்பிய செய்தி ‘முழுப் பொய்’ என்று புது டில்லியில் நேற்று உத்தியோகபூர்வமாக மறுக்கப்பட்டது. பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கே ஏற்பாடு செய்யப்படவில்லையென அறிவிக்கப்பட்டது.

# ‘ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம்’
## இந்தோனேஷியா, டச் நாடுகளுக்கு யுதாண்ட் கோரிக்கை

நியூயோர்க், மே 24

ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டாமென்று இந்தோனேஷியாவையும் டச்சு அரசாங்கத்தையும் ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கேட்டுள்ளார். ஆக்கிரமிப்புச் செயல்களை நிறுத்திவிட்டு மேற்கு இரியான் விவகாரம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தும்படி இருநாடுகளையும் யுதாண்ட் கேட்டுள்ளார்.

மேற்கு இரியானில் இந்தோனேஷியா பாரசூட் துருப்புக்களை இறக்குவதை நிறுத்திவிடும்படி கேட்குமாறு யுதாண்ட்டுக்கு டச்சு அரசாங்க பிரதமமந்திரி கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

இதற்கு யுதாண்ட் எழுதியுள்ள பதிலில் இந்தோனேஷியா கேட்டுக் கொண்டால் அது இத்தகராறில் ஒரு பக்கத்தை சார்ந்து கொண்டிருப்பதாக முடியுமென்றும் எனவே இருபகுதியினரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்காமல் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும்படியும் கேட்டுள்ளார்.

மேற்கு இரியானுக்கு ஐ நா. பார்வையாளர்களை அனுப்ப வேண்டுமென்று டச்சு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளையும் யுதாண்ட் நிராகரித்துவிட்டார்.

இருபகுதியினரும் கேட்டுக் கொண்டால்தான் மேற்கு இரியானுக்கு பார்வையாளர்களை அனுப்ப முடியுமென்றும் யுதாண்ட் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் மேற்கு இரியானில் ஐந்து நகரங்களிலிருந்து டச்சு அரசாங்கம் தனது பிரஜைகளில் பெண்களையும் குழந்தைகளையும் வேறு இடங்களுக்கு அழைத்துக் கொண்டது.

இந்தோனேஷியப் படைகள் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகவும் டச்சு படைகள் கைவிட்டுச் சென்ற வாகனங்களை இந்தோனேஷியப்படை உபயோகிப்பதாகவும் இந்தோனேஷியச் செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

### பசிபிக்கில் ரஷ்யதளம்

ஜாகர்த்தா, மே 23

இந்தோனேசியாவுக்கு ராணுவ உதவி அளிப்பதானல் அதற்குப் பதிலாக அதன் தீவுகளில் ஒன்றைத் தம்மிடம் கொடுக்கவேண்டுமென ரஷ்யா கேட்டிருப்பதாய் “நியூஸ்வீக்” என்ற அமெரிக்க பத்திரிகை கூறியுள்ளது. பசிபிக்கில் ஒரு கடற்படைத்தளத்தை அமைப்பது ரஷ்யாவின் உத்தேசம். 12 நீர்மூழ்கிக் கப்பல்களையும், ஜெட்விமானங்களுக்கான பாகங்களையும் ரஷ்யா கொடுக்குமெனக் கூறப்படுகிறது.

### இமய மலையில் எட்மண் ஹில்லறி

நியூயோர்க், மே 24

எவரெஸ் சிகரத்தில் முதல் முதல் கொடி நாட்டிய சேர் எட்மண்ட் ஹில்லறி, வருகிற மார்ச்சு மாதம் இமயமலையைத் தமது கோஷ்டியொன்றுடன் தாண்டிச்செல்லவிருக்கிறார்.

இமயமலை ஏற முயற்சித்த பல கோஷ்டியினருக்கே உதவி புரிந்து வந்த ஷேப்பா மக்களுக்கு தியாங்பொச்சி என்னும் கிராமத்தில் ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவுவதற்காகவே சேர் ஹில்லறி இமயமலை ஏற உத்தேசித்துள்ளாராம். ஷேப்பா மக்கள் இமய மலையில் வாழும் ஒரு ஜாதியினர். ஷேப்பா மக்களுக்குக் கல்வி வசதி செய்யும் நோக்கத்துடனேயே தமது கோஷ்டி அங்கு செல்வதாக சேர் ஹில்லறி பத்திரிகை மகாநாடொன்றில் தெரிவித்தார்.

### ஆசிரியைக்கு பிரிவுபசாரம்

பருத்தித்துறை, சனி

காசிநாதர் வித்தியாசாலையில் இருந்து துன்னாலை மேற்கு மெதடிஸ்த பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லும் ஆங்கில ஆசிரியை திருமதி தி. பாலசுந்தரத்துக்கு பாடசாலை ஆசிரியர்கள் பிரிவுபசாரம் ஒன்று நடத்தினர்.

தலைமை ஆசிரியர் திரு. க. நல்லதம்பி தலைமையில்நடைபெற்ற இப்பிரிவுபசார வைபவத்தில் ஆசிரியையின் சேவையைப் பாராட்டிப் பலர் பேசினர்.

---

ரங்கூன், மே 24

நேற்று லாவோசுக்குத் திரும்புவதற்கிருந்த லாவோசின் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா நேற்றுப்பிரயாணமாகவில்லை. நேற்றுப் பிரயாணம் தடைபட்டதற்குவிமானத்தின் என்ஜினில் ஏற்பட்ட கோளாறுதான் காரணமாம்.

# ஐ. தொ. காங்கிரஸின் புதிய திட்டங்கள்
## ஜனப் அஸீஸ் அறிவிப்பு

நாவலப்பிட்டி, புதன்

“ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் நிர்வாகஅமைப்பிலும், செயல்த் திட்டங்களிலும் புதிய மாறுதல்களை செய்து வருகிறோம். இத்திட்டங்களின் படி புதிய காரியாலயங்கள் பல திறக்கப்பட்டு வருகின்றன. பிரஜாவுரிமை பெறுவது மட்டுமன்றி தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கான திட்டங்களும் இடம் பெற்றுள்ளன.”

இவ்வாறு ஐ. தொ. காங்கிரஸ் தலைவர் ஜனப் ஏ. அஸிஸ் தொளஸ்பாகையிலுள்ள கந்தலோயா தோட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது கூறினர்.

நாவலப்பிட்டி ஜில்லாத்தலைவர் திரு. எஸ். ராஜூ இக்கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

ஜனப் ஏ. அஸீஸ் மேலும் கூறியதாவது:-

இந் நாட்டின் பொருளாதார சிற்பிகள் தோட்டத் தொழிலாளர்கள். ஆனல் சமுதாயத்தில் தங்களுக்குரிய இடத்தைப் பெறவில்லை. நாட்டின் ஒரு பகுதியினர் பின்தங்கிய வாழ்க்கையில் இருப்பது முழுநாட்டிற்கும் நஷ்டமாகும். இந்த உடலில் ஒரு சிறு பகுதி நோயினல் பீடிக்கப்பட்டாலும் அது முழு உடம்பையும் பாதிக்கும். இந்த உண்மையை அரசாங்கம் உணரவேண்டும்.

இக் கூட்டத்தில் மாதர் சங்கத் தலைவி ஸ்ரீமதி ஐ. நல்லசெல்வம், நாவலப்பிட்டி மாவட்டப் பிரதிநிதி திரு. சுயம்பிரகாஸ், தலவாக்கொல்லை மாவட்டப் பிரதிநிதி திரு. என். செல்லையா ஆகியோரும் பேசினர்.

## மணி வாக்கு

"மனிதனுக்கு மனிதன் மெய் நட்புப்பாராட்டி தீவிர நட்புறவுடன், வீட்டுக்கு வீடு, நாட்டுக்கு நாடு நெருங்கிப் பழகினால் வேற்றுமை நீங்கும். ஒற்றுமை ஓங்கும். அன்பு தழைக்கும்".

ஈழநாடு
EELA NADU

EELA NAD'J: National Tami Daily Post Box 49. Jaffna
Telegrams EELA NADU Jaffnal
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 12 உ (25-5-62)

## சிறு கைத்தொழில் சேவை நிலையம்

குடிசைக் கைத்தொழில்களை விருத்திசெய்வதில் அரசாங்கம் கடந்த பல வருடங்களாக மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது. இதற்காக அவ்வப்போது பண உதவியும் புரிந்து வருகின்றது. எனினும் குடிசைக் கைத்தொழில்கள் மூலம் நாட்டு மக்களின் தேவைகள் விரும்பிய அளவுக்குப்பூர்த்தி செய்யப்படவில்லை.

சிறு கைத் தொழில்களுக்கு ஆதரவளித்து அவற்றின் சேவையைப் பயன்படுத்துவதற்காக ஐ. நா. ஸ்தாபனத்துடன் இலங்கை அரசாங்கம் இப்போது செய்துள்ள ஒப்பந்தம் பெரிதும் வரவேற்கத்தக்கது. கைத்தொழில்களை நல்ல முறையில் விருத்திசெய்யவும், அவற்றின் தரத்தை உயர்த்தவும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் நல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது. அனுபவம் வாய்ந்தவர்களின் சேவை இதுவரை சிறு கைத்தொழில்களில் ஈடுபடுபவர்களுக்குக் கிடையாதபடியால் அப்பொருள்களின் தரம் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் அவற்றை நாடெங்கும் பரப்புவதற்கான வசதிகளும் இல்லை. இதனால் சிறு கைத்தொழில்கள் சிலமுளையிலேயே கருகிவிடுவதுமுண்டு.

ஐ. நா. ஸ்தாபனத்தின் ஆதரவுடன் அரசாங்கம் நிறுவப்போகும் சிறு கைத்தொழில் சேவைநிலையம் இத்தொழில் விருத்திக்கான பல வசதிகளை அளிக்குமெனத் தெரிகிறது. சிறு கைத்தொழில்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்கான ஆலோசனைகளையும், ஆராய்ச்சி வாய்ப்புக்களையும் இந்நிலையம் அளிப்பதுடன் அப்பொருள்களை நாடெங்கணும் விற்பனைசெய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்யத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் இதுபோன்றதொரு சிறு கைத்தொழிற் சேவை நிலையத்தை நிறுவுவதன்மூலம் இலங்கையின் மூலவளங்களையே ஆராய்ந்து அவற்றைப் பயன்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பும் ஏற்படுகின்றது.

மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களைத் தயார்செய்யும் சிறு தொழிற்சாலைகள் நாடெங்கும் ஆரம்பிக்கப்படுமானால் மக்களுக்கு அப்பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதுடன் எமது பணத்தின் பெரும்பகுதியை வெளிநாடுகளுக்கு அனுப்பாமலும் பாதுகாத்துக் கொள்ளலாம். இதனால் நாட்டின் பொருளாதார நிலையும் விருத்தியுறும். அத்துடன்வேலையற்றிருக்கும் ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்குத் தொழில்வாய்ப்புக்களை அளிப்பதும் சாத்தியமாகின்றது.

நிபுணர்களின் ஆலோசனைகளும், தளபாடங்களும், தயார் செய்யப்பெறும் பொருள்களை விற்பனைசெய்வதற்கான வசதிகளும் இக்கைத்தொழில் சேவை நிலையத்தின்மூலம் கிடைக்கும்போது, இத்துறையில் ஈடுபட்டு உழைப்பவர்கள் இச்சந்தர்ப்பத்தை நழுவவிட மாட்டார்கள் என்றேநம்புகின்றோம். கூட்டுறவுப்பண்ணைகளும், இளைஞர் விவசாயக் கழகங்களும், சமூகமுன்னேற்றச்சங்கங்களும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்துவார்களென எதிர்பார்ப்போம்.

# இந்துசமய பாடத் திட்டம்

## இரு கருத்துக்கள்

**'ஈழநாடு' 21-5-62 இதழில் வெளியான 'இந்துசமயப் பாடத்திட்ட பிரச்சினை' என்னும் கட்டுரையைத் தொடர்ந்து பல கருத்துக்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் இரண்டு கருத்துக்கள் இங்கு வெளியாகியுள்ளன.**

### (1) மாற்றவேண்டும்

பல ஆண்டுகட்கு முன் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கூடிய சைவசமய போதனையைப் பற்றிய மகாநாட்டில் சிவ ஸ்ரீ ஈசான சிவாசாரியார் பேசியபின் காலஞ்சென்ற கலைப்புலவர் க. நவரத்தினம் தற்கால நிலைக்கேற்ப மாணவர்களின் நவீன சிந்தனைகளைக் கருத்துட்கொண்டு சீர்திருந்திய முறையில் சமயம் படிப்பிக்க வேண்டும் என்றார். இது பற்றி நண்பர்களுடன் பேசும்போது, "உலகாயதம் முதலிய நவீன வாதங்களால் சந்தேக விபரீதங்களுக்கு ஆளாகிய மாணவர்கள் திருப்தியுறும் வகையில் சீர்திருந்திய முறையில் சமயபாடத்திட்டம் வகுத்துப் போதிக்கவேண்டும். விஞ்ஞான யுகத்தில் "மேம்பட்ட விமர்சனங்களை ஏற்று எமது சமய சாஸ்திரங்களைப் புதிய கோணத்திலிருந்து ஆராய்ந்து படிப்பிக்கவேண்டும். இம்முறையே மேல்நாட்டில் சமீபகாலத்தில் மதபோதனை பற்றிச் சிந்திப்போரால் அனுசரிக்கப்படுகிறது" என்றார். மேல்நாட்டு முறையில் கல்விகற்றவர்கள் பலர் விவேகானந்தர் இராதாகிருஷ்ணன் முதலிய நவீன இந்து தத்துவசாஸ்திரிகளின் எண்ணங்களால் கவரப்பட்டமையால் இப் புதிய பாடத்திட்டத்தை வகுத்தனர். ஆனால் பழைய கல்விகற்ற பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு எந்த நவீனமுறையிலும் மதபோதனை செய்வதை விரும்புகிறாரல்லர். சமயங்கள் குறித்துப் பாமரரிடையே ஏற்பட்ட பாராமுகமே இப் புதிய திட்டம் இம் மூன்று ஆண்டுகள் நின்று நிலவிப் பல தீங்குகள்புரியக் காரணமாயிற்று.

அமெரிக்காவில் மதபோதனை குறித்து அரசாங்கம் பாராமுகமாய் இருந்தகாலத்தில் பல மதத்தவரும கூடிக் கல்லூரிகளிலும் சர்வ கலாசாலைகளிலும் மதபோதனைக்கு வழி செய்யக் கூட்டு முயற்சி எடுத்தனர். பல அரிய நூல்களை வெளியிட்டனர். அச் சபையின் தலைவர் மோர்கன் ஆறுமாத உபகாரச் சம்பளம் பெற்று இந்தியாவுக்கு வந்து இந்துசமய சாஸ்திரம், நடைமுறைகள், கிரியைகளைப்பற்றிய அறிவு படைத்தவர்களை நாடி அவர்களைக்கொண்டு கட்டுரைகள் எழுதுவித்து "இந்துக்களின் சமயம்" என்ற நூலைத் தொகுத்துச்சென்று அமெரிக்காவில் வெளியிட்டார். இதில் வேதங்கள் முதலிய இந்துமத நூல்களைப்பற்றிய கட்டுரை சென்னைச் சர்வகலாசாலைச் சமஸ்கிருத பேராசிரியர் டாக்டர் வி இராகவனால் எழுதப்பட்டுள்ளது. பரம்பரைக் கருத்துக்கு விரோதமில்லாமல் சமய சாஸ்திரங்களின் கருத்தைக் கூறி முக்கியபகுதிகளை மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறார். நம் சமயபாட நூல் எழுதுவோர்போல கீத். மக்டொனல்ட், மாக்ஸ்முல்லர் போன்ற பேரறிஞர்களின் வாக்குக்களை ஆதாரம் காட்டவில்லை. அவர்கள் மொழி பெயர்ப்புக்களைக்கூட உபயோகிக்கவில்லை. பதிப்பாசிரியர் மோர்கன் கூடத் தொடர்ந்து படிக்க விரும்புவோருக்குப் புததகங் குறிக்கையில், புளும்பீல்டு முதலிய நமது நாட்டுப் பழைய வேத ஆராய்ச்சியாளரின் ஓரிரு நூல்களைக் குறிப்பிட்டு அவற்றில் சில பகுதிகள் இந்துக்களால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா எனினும், வேறு நூல்களில் கிடையாதசெய்திகள் பல அவற்றில் காணப்படுவதால் அவற்றையும் படிக்கலாம் என்கிறார். அமரிக்கருக்கு இந்தியர்கள் இந்து மதத்தை எப்படி நோக்குகிறார்கள் என்பதை எளிதாகக் காட்ட இவ்வளவு முயற்சி எடுத்துள்ளார்கள். ஆனால் நம் நாட்டில் சைவப் பிள்ளைகளுக்குச் சைவ ஆசிரியர்கள் பிற மத, பிறநாட்டு வரலாற்ற் றாராய்ச்சி யாளரின் கருத்துக்களை இந்துசமய பாட நூலில் அதிகார சூத்திரங்களாக எடுத்துக்காட்டுகிறார்கள்.

—சைவ ஆசிரியன்

### (2) மாற்ற வேண்டாம்!

உலகெலாமான உண்மைக் கடவுளின் அரும் பெரும் திருவடிகளை அடைதற்கு வழி காட்டிகளாக அமைவனவே சமயங்களாகும். இச்சமயங்கள் யாவும் கட்டற்ற கடவுளாலே ஆக்கப்பட்ட வேதாகம நெறிகளிலிருந்து உருவாகியவைகளேயாகும். இச்சிறப்பு வாய்ந்த வேதாகமத்திலே அமைந்துள்ள கிரிகைகளை மாணவர்கள் கற்றுணர்ந்து புரிய மாட்டார்கள் என்று சிலர் கூறுவது, சமயத்திற்கு முரண்பாடானதும், அறிவின்மையுமே யாகும்.

மாணவர்களுக்கு சமயம் பற்றியும் அதன் உண்மைக் கடமைகளையும் கற்றுணரும்தருண பாடசாலைகளில்கற்கும் போது தான் உருவாகும். ஆகவே அருஞ்சிறப்பு வாய்ந்துள்ள சமயக் கிரிகைகளை இளமைப் பிராயத்திலே கற்றுணர்ந்தாற்றான் கடவுளுடைய அரும் பெரும் சோதித்திருவடியை அடையமுடியும்.

உலகம் உய்யும் வழியெல்லாம் வேதாகமத்திலேதான் அடங்கியுள்ளது. இத்திறன் விளைந்துள்ள வேதாகமக்கிரிகைகளை அரும்பாடுபட்டுத் தான் மாணவர்கள் கற்றுணர்ந்துய்ய வேண்டும்.

புதிய சமய பாடத்திட்டத்தை வகுத்த பெரியோர்கள் ஆதரவாளர்கள் தங்களால் இயன்றவரையில் இன்னும் மாணவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டி உய்விக்கக்கூடிய சமய நெறிகளை புதிய சமய பாடத்தோடு சேர்த்து உதவ வேண்டும்.

இ. கதிரமலைநாதன்.

# பால் உணவு ஆராய்ச்சி சில அபூர்வ தகவல்கள்

மனிதர்களின் இன்றியமையாத முக்கிய உணவு பால். குழந்தையாக இருக்கும்பொழுது தாய்ப்பால் அருந்துவதை நிறுத்திய பின் பசுவின் பாலை உண்டுதான் மனிதர்கள் வளர்கிறார்கள். பால் சிறந்த உணவு என்று மட்டும்தான் இதுவரை எல்லோருக்கும் தெரியும். அது சிறந்த உணவு மட்டுமல்ல, உன்னதமான மருந்தும் கூட என்பது இப்போது பல ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கதிரியக்க ஆபத்தைக்கூட அது தடுக்கக்கூடியதாம்.

குட்டி போட்டு பால் கொடுத்து வளரும் உயிரினங்களில் பெரும்பாலானவை இளம் பிராயத்தில் பால் உணவை அருந்தியே வளர்ச்சியடைந்து வருகின்றன. இதற்குத் தகுந்த உயிரியல் காரணம் இல்லாமலில்லை. பால் ஜீவனையளிக்கும் அமிர்தம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். நாகரிக வாழ்க்கைக் காரணமாக ஏற்படும் பல நோய்கள், வாழ்க்கைக் கோளாறுகள் முதலியவைகளைக்கூட இந்த அமிர்தம் ஏற்படாமல் தடை செய்கிறது.

பாலின் இக்குணத்தை விவரித்து பிரபல, ஆஸ்திரிய உணவுச்சத்து நிபுணரும் வைத்திய ஆராய்ச்சியாளருமான பேராசிரியர் ஹால்டன் தன் புத்தகத்தில் இதுபற்றி விரிவாக எழுதியிருக்கிறார். இப்படி ஒவ்வொரு நாட்டிலும் தொழிற்புரட்சி ஏற்பட்ட காலத்தில் பால் உணவு அதனால் ஏற்பட்ட நோய்களை தவிர்த்திருக்கிறது என்று இவர் விவரித்திருக்கிறார். பவேரியாவைச் சேர்ந்த விவசாயிகள் சங்கம் இப்புத்தகத்தை பிரபலப்படுத்தியுள்ளது.

இப்போதுள்ளதைப் போல, வாயு மண்டலத்திலும் மனிதன் வாழும் சூழ்நிலையிலும் ரசாயன பொருள்கள் கலந்திருப்பதைப் போல எப்பொழுதும் இருந்ததில்லை என்று அவர் கூறுகிறார். இந்த ரசாயனப் பொருள்கள் மிகவும் அபாயகரமானவை. இதனால் ஜனங்களின் சுகாதாரத்திற்கும் உயிருக்கும் பேராபத்து ஏற்படும் என்றும் இவர் எச்சரித்திருக்கிறார்.

பால் உணவில் உள்ள ஒரு விசேஷஅம்சம் உடம்பில்சேரும் இத்தகைய விஷ ரசாயன பொருள்களையும் உடலிலிருந்து வெளிப்படுத்தி தேகத்தைக் காப்பதாகும். முக்கியமாக ஈரல் பகுதியில் இந்த விஷத்தை வெளிப்படுத்தும் வேலை முக்கியமாக நடைபெறுகிறது. தோய்ந்த பால், பாலாடை இவை ஈரல் சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்த ஒப்பற்றவைகளாகும். "ஸல்பனைடு" மருந்துகள், பென்ஸிலின், ஸ்டிரெப்சோமிஸின் இவைகளை உட்கொள்ளும் நோயாளிகள் பால் உணவை அருந்துவதின் மூலம் எளிதில்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கண்டிக்குப் பக்கத்திலுள்ள தபோவனத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இதுவரை பார்க்காவிடில் அவசியம்போய்ப்பாருங்கள். கண்டியில் பஸ் ஏறினால் 10 நிமிஷங்களில் அது உங்களை அங்கு கொண்டு விட்டுவிடும். தென்னக்கும்பர என்னுமிடத்தில் மகாவலிகங்கைக் கரையோரத்தில் திவ்ய ஜீவன சங்க தபோவனம் இயற்கை அழகு கொஞ்சும் சூழ்நிலையில் அமைந்திருக்கிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தார் கட்டியதாம் அந்தப் பெரிய கட்டடம். கண்டியிலுள்ள புகழ்பெற்ற பிள்ளையார் கோவிலைச் சேர்ந்தது. வருடத்துக்கு ஒருமுறை பிள்ளையார் அங்கு வந்து தீர்த்தம் கொடுக்கின்றார். அந்தக் கட்டடத்திலேயே சின்னப்பிள்ளையார் கோவிலுமுள்ளது. திரைகடலோடி திரவியம் தேடுகையில், அவர்கள் ஆங்காங்கே கோவில்கள், மடங்கள் முதலியவை கட்டி நிரந்தரமான தர்மங்களைச் செய்திருக்கிறார்கள். இக்காலத்தில் அங்கு இந்த மாதிரி சிவதருமம் செய்வதென்றால் அது அநேகமாக நினைக்கவும் முடியாது. கொழும்பு வெள்ளவத்தையில்பழைய கதிரேசன், புதுக்கதிரேசன் கோவில் விடுதிகளை எவ்வளவு முன்யோசனையுடன் அமைத்துள்ளனர். இக்காலத்தில் அப்படிக் காணி வாங்கி விடுதிகளை அமைக்க முடியுமா? எவ்வளவு லட்சமாகும்? தமிழ் மன்னர்களுக்குப் பின், நகரத்தார்களே இவ்வாலயங்கள் கட்டி இவ்வித தருமங்களைச் செய்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் கூட வண்ணையம்பதியிலே கதிரேசன் கோவில் அமைத்துள்ளனர். உற்சவங்களும் நடந்து வருவதைப் பார்க்கின்றோம்.

* * *

நகரத்தார்களில் பெரும்பாலோர் புதுச்சங்கடங்கள் காரணமாக தாய்நாட்டுக்குத் திரும்பிவிட்டார்களாம். செட்டியார் வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த ஒரு நண்பரைப் பார்த்தேன். சென்ற ஆண்டிலே தங்கள் சங்கத்தில் 525 மெம்பர்கள் இருந்ததாயும், இப்போது அந்த எண்ணிக்கை 280க்குக் குறைந்து விட்டதாயும் தெரிவித்தார். கடைகளை மூடிவிட்டுப் பலர் தாயகம் சென்றுவிட்டதாகவும், மற்றவர்களும். வர்த்தகத்தைக் குறைத்துக்கொண்டு கவலையுடன் நாட்களை ஒவ்வொன்றாக ஓட்டிவருவதாயும் கூறினர்.

இந்திய வர்த்தகர் சங்கத்திலும் மொத்தமெம்பர்கள்சென்ற வருடம் 425 ஆக இருந்தது. இப்போது 225க்குக் குறைந்துள்ளதாம்.

இனி இலங்கைக்கு அவசிய தேவை என்று மந்திரி கருதுபவர்களுக்கு மட்டுமே விஸா கொடுக்கப்படலாமென்று வதந்தி உலவுவதாயும், அதனால் கடையை மூடிவிட்டு, ஊர் திரும்பிவிடலாமா என்றும் ஓர் அன்பர் கேட்டார். என்றோ சாவோமென்பதற்காக இப்போதே தற்கொலை செய்து கொள்ள வேண்டுமா? வருவது வரும்போது வரட்டும். தெய்வ நம்பிக்கையுடனே தொடர்ந்து வர்த்தகம் செய்யும்படியும் நல்லவர்களுக்கு ஒரு தீங்கும் வராதென்றும் அந்த அன்பருக்குச் சொன்னேன்.

* * *

ஏதோ சொல்ல வந்துவேறு எங்கோ பாய்ந்துவிட்டேன். மன்னிக்க வேண்டும். தென்னக்கும்பராவிலுள்ள அந்த மடம் சென்ற பல வருடங்களாக மூடப்பட்டு பாழாகக் கிடந்தது. ஏழு வருட காலமாக அங்கு சுவாமி சச்சிதானந்தருடைய தலைமையில்,

(5-ம் பக்கம் பார்க்க)

# ‘உணவுப்பொருட்கள் பற்றிய முறையீடுகள்

## உடனே விசாரணை செய்ய உணவு மந்திரி உத்தரவு

கொழும்பு, வியாழன்
இனிமேல் உணவுப் பொருட்கள் வியாபாரம் பற்றிச் சம்பந்தப்பட்ட முறையீடுகள் ஏதாகிலும், எம். பி. க்களாலோ பத்திரிகைகளாலோ அன்றேல் வேறு பொறுப்புள்ள மக்களாலோ கொண்டு வரப்பட்டால் அதுபற்றி ஐயம் தீர விசாரணை செய்து தனக்கு அறிவிக்க வேண்டுமென உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். உத்தரவாத விலைத்திட்டம், நெல்விற்பனவு, கருவாடு, வெண்காயம் போன்ற பொருட்கள் விற்பனவு ஆகியவற்றில் அண்மையில் பல முறையீடுகள் கிடைத்ததன் பலனாகவே மந்திரி இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

## தந்தையைப் பார்க்க விசேஷ அனுமதி

கொழும்பு, வியாழன்
சதித்திட்டத்தில் பங்குபற்றினரென தற்பொழுது கைது செய்யப்பட்டிருக்கும் கேணல் டீ. மெல் நேற்று கடும் சுகவீனமடைந்திருந்த தன் தந்தையைப் பார்க்க விசேஷ அனுமதி கொடுக்கப்பட்டார். அரை மணிநேரம் தந்தையுடனிருந்து விட்டு வந்தபின் தந்தை காலமானார். மீண்டும் அரை மணி நேரம் செல்வதற்கு மெல் அனுமதிக்கப்பட்டார். இரு முறையும் பொலிஸ் காவலுடனேயே அவர் சென்றார்.

# சிறு கைத்தொழில் சேவை நிலையம் நிறுவ உடன்படிக்கை

## ஐக்கிய நாடு உதவியளிக்கும்

கொழும்பு, வியாழன்
சிறு கைத்தொழில் சேவை நிலையம் ஒன்றை மொரட்டுவைக்கு அருகில்வெலோனவில் நிறுவுவதற்கான உடன்படிக்கை ஒன்று இலங்கை அரசாங்கத்துக்கும் ஐக்கிய நாட்டுச் சபையின் விசேஷ குழுவொன்றிற்கும் சர்வதேச தொழில் ஸ்தாபனங்களுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய நாட்டுச் சபை 1,013,000 டாலர்களை இத்திட்டத்திற்கு உதவியுள்ளது. இலங்கை அரசாங்கம் இதற்காக 1,321,000 டாலர்களை கொடுக்கும்.

இத்திட்டத்தை அமுல் நடாத்தும் பொறுப்பு சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாட்டுச் சபையின் உதவி, நிபுணர்களைக் கொடுத்துதவுதல் 182,590 டாலர்களுக்குத் தளபாடங்கள் வழங்குதல் போன்ற வழி வகைகளில் கொடுக்கப்படும்.

இலங்கையில் இவ்வகையான கைத்தொழில் சேவையை நிறுவுவதன் மூலம் இலங்கையர்களுக்குப் பயிற்சியளித்து ஆராய்ச்சிகள் செய்து சிறு தொழிலாளர்களுக்கும், கூட்டுப் பண்ணை கைத்தொழிலாளர்கட்கும் உதவி புரிவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## “பொன்னுஸ்” கோஷ்டி வென்றது

யாழ்ப்பாணம், வியாழன்
கடந்த வாரம் குருநகரிலே நடந்த கைப்பந்தாட்டப் போட்டிகளில் ‘பொன்னுஸ்’ கைப்பந்தாட்டக் கோஷ்டி மிகவும் திறமையாக விளையாடி வெற்றியீட்டியுள்ளது. போட்டிகளில் பங்குபற்றிய கோஷ்டிகளின் பெயர்கள் பின்வருமாறு:-

1- மனேன் கைப்பந்தாட்டக் கோஷ்டி
2- சீ. வியூ. கைப்பந்தாட்டக் கோஷ்டி.
3- புனிதவளன் கைப்பந்தாட்டக் கோஷ்டி.
4- சில்வர்ஸ்ரார் கைப்பந்தாட்டக் கோஷ்டி.

போட்டிகள் மின்சார ஒளியில் விளையாடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## கசிப்பை ஒழிக்க பிரச்சாரம்

கொழும்பு, வியாழன்
கசிப்புத் தொல்லையை ஒழிப்பதற்கு விளம்பரப் பிரசாரம் ஒன்றை ஆரம்பிப்பதென உள்நாட்டமைச்சு அண்மையில் முடிவு செய்திருக்கிறது.

பௌத்த சங்கம் சுகாதாரப் பகுதி, கல்வி இலாகா, ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட ஒருமகாநாட்டை கூட்டி கசிப்பு ஒழிப்புப் பற்றி ஆராய்வதென உள்நாட்டுக் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா முடிவு செய்திருக்கிறார். கிராம முன்னேற்றச் சங்கங்கள் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளும்.

கசிப்பு ஒழிப்பதற்கு பண வசதி அளிக்க அரசாங்கம் ஒத்துக் கொண்டிருக்கிறதென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கசிப்பின் தீமைகள் என்னும் விடயம் பற்றி பாடசாலை மாணவர்களிடையே ஒரு கட்டுரைப் போட்டியைநடத்தும்படி கல்வி இலாகாவைக் கேட்பதென உள்நாட்டமைச்சு தீர்மானித்திருக்கிறது.

கசிப்புத் தீர்மைகள் பற்றிய படங்களும் திரையிடப்படும் கசிப்பினுல் பாதிக்கப்பட்டவர்களின் புள்ளிவிபரங்களை சுகாதாரப் பகுதியினர் கொடுத்துதவுவர்.

## இந்தியதூதராலயங்களை தடைவிதிப்புபற்றி லக்ஷ்மி மேனன்

புதுடில்லி, மே 24
பீக்கிங்கிலுள்ள இந்திய தூதராலயத்தை மூடிவிட வேண்டுமென்ற ஒரு யோசனைக்கு வெளிநாட்டு விவகார மந்திரி திருமதி லக்ஷ்மிமேனன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இந்திய ஸ்தானிகர்கள்மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் காரணம் ஒன்றுக்காகத் தூதராலயங்களை மூடிவிடுவது இந்திய அரசாங்கத்தின் கொள்கையல்லல என்று அவர்கருத்துத் தெரிவித்தார்.

சீனு, திபேத் ஆகிய நாடுகளிலுள்ள தூதராலயங்கள் இப்போதும் பலத்த கட்டுப்பாடுகளுக்குள்ளாகி வருகின்றன எனத் திரும்தி மேனன் கூறினர்.

பீக்கிங்கிலுள்ள இந்திய ஸ்தானிகர்கள் தலைநகரத்திலிருந்து 20 கில்லோ மீட்டர்களுக்கு அப்பால் செல்லவேண்டுமானுல் சீன அதிகாரிகளிடமிருந்து அனுமதிபெறவேண்டுமாம்.

திபேத்திலுள்ள இந்தியதூதராலயங்கள் மீது கட்டுப்பாடுகள் மேலும்அதிகமாகவுள்ளன எனத் திருமதி மேனன் கூறியுள்ளார்.

## சிங்களத்தில் திருக்குறள் மொழிபெயர்த்தவருக்கு தங்கப் பதக்கம்

அநுராதபுரம், வியாழன்
அநுராதபுரம் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் அநுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்தில் வருகிற சனிக்கிழமையன்று திருவள்ளுவர் விழா நடைபெறவிருக்கின்றது. கழகத் தலைவர் திரு. ஜே. ஸ்ரனிஸ்லாஸ் விழாவுக்குத் தலைமை தாங்குவார். திருக்குறளை சிங்களத்தில் மொழிபெயர்த்த செல்வி ஜி. மிசிஹாமிக்குக் கழகம் தங்கப் பதக்கமளித்துக் கௌரவிக்கும் எனத் தெரிகிறது. உள்நாட்டு கைத்தொழில் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபாலசேனநாயக்கா பிரதமவிருந்தினராகக் கலந்து இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்குவார்.

சிறந்த சொற்பொழிவுகளும் இன்னிசை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறவிருக்கின்றன

# ஆயுள்வேத வைத்தியம் சிறுபிள்ளை வாதத்தைக் குணமாக்கும்

— சுகாதார மந்திரி

கொழும்பு, வியாழன்
“சிறுபிள்ளை வாதத்திற்கு ஆயுள்வேதச் சிகிச்சை பலனளிக்கவில்லை என்பது பற்றி எனக்குத் தெரியும். ஆயுள்வேத வைத்தியசாலையில் கூடுதலான சிறுபிள்ளை வாத நோயாளிகளை அனுமதிப்பதற்கான ஒழுங்குகளை நான் செய்வேன்.” இவ்வாறு சுகாதார மந்திரி திரு. ஏ பி. ஜயசூரியா நேற்றுத் தெரிவித்தார்.

ஆயுள்வேதக் கமிஷனர் காரியாலயத்தில் ஆயுள்வேத வைத்திய நிபுணர்களின் மகாநாட்டில் பேசுகையிலேயே மந்திரி மேற்கண்டவாறு கூறினர்.

“சிறுபிள்ளைவாத நோய் இப்பொழுது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுந்த தருணத்தில் மருந்து வகைகளைத் தந்துதவிய நாடுகளுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்” என்று மந்திரி தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தார்.

சிறுபிள்ளைவாதம் ஆயுள்வேத வைத்தியத்திற்கு புதியதல்ல. ஆகலினுல் சிறுபிள்ளை வாதத்தைக் குணப்படுத்த ஆயுள்வேத மருந்துகள் உண்டென்பது என் திடமான நம்பிக்கை என்றும் மந்திரி தெரிவித்தார்.

## சதிவழக்கு

### முடிக்குரிய வழக்கறிஞர் தெரிவு

கொழும்பு, வியாழன்
ஜூன் 7-ம் திகதி நடைபெறவிருக்கும் சதித்திட்ட வழககில் ஆஜராவதற்கான முடிக்குரிய வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அட்டோர்ணி ஜெனரல் திரு. டக்ளஸ் ஜான்ஸ் தலைமையில் திரு. ஆனந்த பெரேரா, திரு. ரி. டி. டி. எஸ். விஜயசுந்தரா, திரு. வி. எஸ். ஏ. புள்ளேநாயகம், திரு. கோயல் திருவல்லை ஆகியோர் முடியின் சார்பில வழக்காடுவர்.

# ‘உபகாரச் சம்பளம் பெற தகுதியான மாணவர் இல்லை’

## சபையில் கல்வி உதவி மந்திரி

கொழும்பு, வியாழன்
நேற்றைய தினம் பார்லிமெண்ட்கூடியபோது பொரளை எம். பி. டாக்டர் டபிள்யு டி. சில்வா இலங்கை மாணவர்களுக்கு வெளிநாடுகள் உபகாரச் சம்பளம் வழங்குவது பற்றி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் “பெல்ஜிய அரசாங்கம் இலங்கை மாணவருக்குப் பல கல்வித்துறைகளில் உபகாரச் சம்பளம் வழங்கியுள்ளது. இலங்கை அரசாங்கமும் அதை வரவேற்றுள்ளது. ஆனால் தகுதியுள்ள மாணவர்கள் இலங்கையில் இல்லை” எனக் கல்வி அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. வி. டி. கருணரத்ன கூறினர்.

பெருங் கடத்தல் ஒன்றில் ஈடுபட்டது சம்பந்தமாக 10 வருட கடும் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்ற ஒருவர் 3 1/2 வருட சிறைவாசத்துடன் வெளியேறியுள்ளது பற்றி நீதியமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி அறிவாரா என திரு. தஹநாயக்கா பார்லிமெண்டரிக்காரியதரிசி திரு. என். எச். எ. எம். கருணரத்னவிடம் கேட்டார். இதற்குப் பதிலளிக்கையில் திரு. கருணரத்ன கூறியதாவது:-

“குறிப்பிடப்பட்ட கைதி எட்ட பெரேராவுக்கு12-6-58ல் 10வருடச்சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதன் பின் கைதியின் நன்நடத்தையை முன்னிட்டுச் சிறைத் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டதன் பேரில் 4-2-62-ல் கைதிக்கு விடுதலை அளிக்கப்பட்ட தென்றார்.

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திவ்ய ஜீவனசங்கம் நடந்து, நல்லதோர் ஆத்மீக ஸ்தாபனமாகப் பொலிந்து வருகிறது. சைவர்கள் மட்டுமின்றி, பௌத்தர்கள், கத்தோலிக்கர், இஸ்லாமியர் எல்லோரும் வந்து சர்வசமய குடும்பம் போல் வேற்றுமையின்றிக்கூடுகின்றனர். ஆசன வகுப்புகள் ஒழுங்காக நடக்கின்றன. மனக்கவலையுடன் வருபவருக்கு சுவாமி அன்புடன் ஆறுதல் கூறி நம்பிக்கை அளித்து அனுப்பும் பெரிய பணி செய்கின்றார். இன்னும் செய்ய வேண்டிய சமூகப்பணி அதிகமுள்ளது.

எதிர்காலத்திலே அந்தத் தவச்சாலை ஆத்மீக முறையில், மேலான சமூகசேவா ஸ்தாபனமாகப் பொலிய திருவருள் பாலிக்குமென்ற நம்பிக்கையுடன் திரும்பினேன்.

* * *

புனையு மாமலர் கொண்டு
புரிசடை
நனையு மாமலர் சூடிய
நம்பனைக்
கனையும் வார்கடனைக்கா
ரோணனை
நினைய வேவினை யாயின
நீங்குமே

— திருநாவுக்கரசர்

## பால் உணவு ..

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

குணமடைகிறார்கள். பால் உணவில் உயர் ரக புரத சத்துக்களும் சில வைட்டமின்களும் இருப்பதே இதற்குக் காரணம்.

தொழிற்சாலைகளில், முக்கியமாக, ஈயம், மற்றும் வாயு மண்டலத்தில் கலக்கக்கூடிய ரசாயனப் பொருள்கள் உபயோகப்படும் இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பால் உணவு அளிப்பது மூலம் அவர்களுக்கு ஏற்படக்கூடிய நோய் ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மூனிச் நகரில் பணி செய்யும் “டிராபிக்” கான்ஸ்டபிள்களுக்கு, வாயு மண்டலத்தில் கலந்துள்ள விஷப் பொருள்களால் ஏற்படும் நோய் நொடிகளை அகற்ற பால் உணவு அளிக்கப்படுகிறது.

பாலில் கால்சியம் (சுண்ணம்பு) சத்து அதிகமாக இருப்பதால் இதை உபயோகிப்பதன்மூலம் கதிரியக்க ஆபத்து உடலை பாதிக்காமலும் செய்ய முடியும் என்பது சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மிகவும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஸ்டி—ரோன்ஷியம் 90 இதனுல் ஏற்படக்கூடிய கதிரியக்க ஆபத்தையும் பால் உணவை உட்கொள்வது மூலம் தடுக்க முடியுமாம் நீண்டகால எக்ஸ்ரே. “ரோண்ட்ஜெனலாஜிகள்” சிகிச்சைக்கு உட்பட்டவர்களுக்கு அதிகப்படியாக பால் தரும்படி சிபார்சு செய்யப்பட்டுள்ளது. மிகப் பழங் காலம் முதல் ஜீவாமிர்தமாக உபயோகிக்கப்பட்டு வரும் பால முக்கிய உணவு மட்டுமின்றி சிறந்த மருந்தாகவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

## ஜேர்மன் கற்பதில் இந்தியமாணவர் ஆவல்

பான் (டாட்), மே, 23
ஜெர்மன் மொழியைக் கற்பதில் இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களிடையே பேரார்வம் காணப்படுகிறது. இப்போது 15 ஜெர்மன் பேராசிரியா சேவை இருந்து வருகிறது. மேலும் 9 ஜெர்மன் பேராசிரியர்கள் சேவையும் கிடைக்க இருக்கிறது. இவ் விவரங்களை ஜெர்மன் அகாடெமிக் எக்ஸ்சேஞ்ச் சர்வீஸ் ஸ்தாபனத்தின் ஜெனரல் மனேஜர் டாக்டர் ஷீய்ப் வெளியிட்டார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இவர் இந்தியா சென்று இந்திய பல்கலை வாழ்க்கையைப் பற்றி நேரில் தெரிந்து கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டார். இவர் இந்திய கலாசார மந்திரி பேராசிரியர் ஹுமாயூன் கபீரைச்சந்தித்து பல அரிய தகவல்களைத்திரட்டியிருக்கிறர் இவருடைய இந்திய விஜயத்தின் பலனக எக்சேஞ்சு சர்வீஸ் ஸ்தாபனத்தின் வேலை இன்னும் விஸ்தரிக்கப்படும். இந்த ஸ்தாபனம் மேற்கு ஜெர்மனியில் படிக்க வரும் அயல் நாட்டு மாணவர்களுக்கு எல்லா வகைகளிலும் உதவியாக இருந்து வருகிறது.

## முன்னேறும் எவரெஸ்ட் குழு

புதுடில்லி, மே 23
எவரெஸ்ட் ஏறும் பாரதக் குழு சௌத் - போல் என்னும் பகுதியை திங்களன்று சென்றடைந்தது. வானிலை சீராக இல்லாத காரணத்தால் குழுவினர் தொடர்ந்து முன்னேற முடியவில்லை.

## நோய்மாறுமுன்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம்மை யாழ்ப்பாணம் கொற்றா நோயா[illegible] ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றி விட்டார்களென்றும் இது பற்றிவிசாரணை நடத்துமாறும் கோரி சுகாதார சேவை டைரக்டருக்கும் சுகாதாரமந்திரி,யாழ்ப்பாணமேயர், உதவிமேயர், ஆகியோருக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

# "மொழியின்றேல் தொழில் இல்லை"

## ஆசிரியர் கூட்டத்தில் பண்டிதர் இரத்தினம்

பருத்தித்துறை, வியாழன்

"எதை நினைக்கிலும் மொழி வேண்டும். மொழியின்றேல் தொழில் இல்லை. பிறந்து மொழி பயின்று தொழில் புரிகின்றோம். மொழியிலே உள்ள கலைகளைப் பயிலாத – அதைப் போற்றாத நாம் மொழியறிவு உடையவர்கள் ஆகமாட்டோம்."

இவ்வறு வித்துவான், பண்டிதர் கா. பொ. இரத்தினம் "தமிழ் உணர்ச்சி" என்னும் பொருள் பற்றி வடமராட்சி ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. அந்தோனி இராசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:–

மனிதப்பண்பு ஒன்று தான் உலகம் முழுவதற்கும் பொது. எமக்கென சிறப்புரிமையான பண்பாடுகள் பல உள. நாம் நமது தமிழ்நாட்டையும் அதன் உண்மை வரலாற்றையும் அறியும்போது தான் உண்மை நிலை எமக்குப் புலப்படும்; புதிய உணர்ச்சியும் பிறக்கும். அதை அறியாது உலக சரித்திரம் தெரிவதால் நமக்குள்ள லாபம் என்ன? நாம் முதலில் தமிழர்கள் என்பதை எப்போதும் மறக்காது செயல் புரிந்தால் தான் எம் இனத்திற்கு வாழ்வு பிறக்கும். பிறநாட்டார்கள் தமது மொழிமீது கொண்டுள்ளமதிப்பு அவர்களை உயர்த்துகின்றது. எம் மொழியில் செய்யக்கூடிய தபால் விலாசம், அறிவித்தல்கள், கடிதங்கள் முதலானவற்றுக்குக்கூட பிறமொழிகளைக் கலக்கும் நிலையில் எமது மொழிப்பற்றை – உணர்ச்சியை இட்டு நாம் கவலைப்படாமல் இருப்பது எப்படி?

ஆசிரியர் திரு. கே. குணரத்தினம் நன்றி கூறினர்.

# சோமராமா மன்னிப்பு கோரவில்லை!

## ஜூன் 12ல் தூக்கிலிடப்படுவார்

கொழும்பு, வியாழன்

பண்டாரநாயககா கொலை வழக்கில் தூக்குத்தண்டனைக்குத் தீர்க்கப்பட்ட தல்டுவ சோமராமா கவர்னர் ஜெனரலிடம் மன்னிப்புக்கோரவில்லை.

வழக்கம்போலல்லாது ஒரு புதுமுறையை சோமராமா நிலை நாட்டியுள்ளார்.

தூக்குத்தண்டனைக்குத் தீர்க்கப்படும் குற்றவாளிகள் வழக்கமாக கவர்னர் ஜெனரலிடம் மன்னிப்புக்கோரி எழுதி மரண தண்டனையை, வாழ்நாள் மறியலாகமாற்றும்படி கேட்டார்கள். ஆனல் சோமராமா அப்படிக் கேட்கவில்லை.

கவனர் ஜெனரலுக்கு வேண்டுகோள்விடுக்கவேண்டிய சகல ஒழுங்குகளையும் கைதி அதிகாரிகள்செய்துகொடுப்பது வழக்கம். சோமராமா விதியின் கையில் தன் வாழ்க்கையை ஒப்படைத்து விட்டார்போல் தெரிகிறதென்று சிலர்கூறினர்.

பண்டாரநாயக்காவைக் கொலைசெய்த குற்றத்துக்காக சோமராமா ஜூன் 12ல் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தூக்கிலிடப்படவிருக்கிறர். ஆனல் இதுவரை தூக்கிலிடப்படுவதை அங்கீகரித்து கவர்னர் ஜெனரலிடமிருந்து சிறை அதிகாரிகளுக்கு எதுவிதமான கடிகடிதமும் கிடைக்கவில்லை.

---

## ரயில் அடித்த கோழி

கல்கமுவா, வியாழன்

தமக்குச் சொந்தமானகோழியொன்றை ரயில் மோதியதாகவும் மோதப்பட்ட அக்கோழியை எடுத்துச் செல்வதற்கான ரயில் சாரதி ரயிலை நிற்பாட்டியதாகவும் கல்கமுவாவை சேர்ந்த திரு. எம். கே. முகமது என்பவர் ரயில்வே ஜெனரல் மனேஜருக்குத் தாம் அனுப்பிய கடிதமொன்றில் முறையிட்டுள்ளார். அநுராதபுரத்துக்கும் கல்கமுவாவுக்குமிடையில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

மே 21-ம் திகதியன்று இச்சம்பவம் நிகழ்ந்ததாக திரு. முகமது அறிவித்துள்ளார். ரயிலினல் மோதப்பட்ட கோழிக்குக் கால்கள் மட்டும் தான் முறிந்துவிட்டனவாம். ரயில் நிற்பாட்டப்பட்டுச் சுமார் கால் மைல் தூரம் பின் நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாம். அடிபட்ட கோழியை எடுத்துச் செல்வதற்காகவே ரயில் நிற்பாட்டப்பட்டதென்றும், சம்பவம் விசாரணை செய்யப்பட்டால் இதற்குச் சாட்சி கூறப் பலர் முன்வருவர் என்றும் திரு. முகமது ரயில்வே ஜெனரல் மனேஜருக்கு அனுப்பியுள்ள அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

## உலக வங்கி தூதுகோஷ்டி விஜயம்

கொழும்பு, வியாழன்

மகாவலிகங்கை பலநோக்குத் திட்டத்தைப் பார்வையிடுவதற்கென உலகவங்கித்தூதுகோஷ்டியொன்று இங்குநேற்று வந்து சேர்ந்துள்ளது.

அபிவிருத்தி புனரமைப்பு வேலைகளுக்குதவும் சர்வதேச வங்கியின் வ்வசாயப் பகுதித் தலைவர் திரு. பி. ஏ. றெய்ட், நீர்ப்பாசன ஆலோசனை என்ஜினீயர் திரு. எச். ஏ. டெக்ஹமர், டாக்டர் ரொபேர்ட் ஸ்மித் ஆகியோர் இத்தூதுகோஷ்டியின் அங்கத்தவர்களாவர்.

காணி விவசாயமந்திரி திரு. ஸி. பி. டி. சில்வாவுடன் இத்தூது கோஷ்டி இன்று பேச்சுவார்த்தைகள் நடத்தும்.

மகாவலிகங்கையை வரண்டபிரதேசத்துக்குத் திருப்பி வரண்டபகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதிசெய்வதே திட்டத்தின் நோக்கம். நீர்பபாசனமின்சார இலாகா அதிகாரிகளுடன் தூதுகோஷ்டி நேற்று ஆரம்ப பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

---

## சோவியத் தடுப்பு மருந்து

கொழும்பு, வியாழன்

சோவியத் ரஷ்யா இலங்கைக்கு வழங்கிய 600,000 பேருக்குப் போதுமான போலியோ தடுப்பு ஊட்ட மருந்து இலங்கையின் தேவைகளை சமாளிக்கக் கூடிய முறையில் உபயோகமாகப் பயன்பட்டது என்று சோவியத் ரஷ்ய தூதராலயத்தைச் சேர்ந்த திரு. வி. பி. ஸிமபனேவ் நிருபர்கள் மகாநாடொன்றில் தெரிவித்தார்.

# தீவுப் பகுதி மக்களின் பிரயாணக் கஷ்டம்

## பார்லிமெண்டில் திரு. கந்தையா விளக்கம்

கொழும்பு, வியாழன்

**தீவுப்பகுதிகளின் போக்குவரத்துக் கஷ்டம்சம்பந்தமாக சென்ற 9-ம் திகதி பார்லிமெண்டில் நடைபெற்ற விவாதத்தின் முழு விபரமும் இங்கே கொடுக்கப்படுகிறது.**

**ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா பிரேரணையைக்கொண்டுவந்தார். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் அதை ஆமோதித்தார். அரசாங்கத்தின் சார்பில் பதிலளித்துப்பேசிய நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அரசாங்கம் பிரேரணையைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருப்பதாகக்கூறி விரைவில் பிரச்சினை சீரடையும் என உறுதியளித்தார்.**

"ஊர்காவற்றுறை தேர்தற் தொகுதியிலுள்ள தீவுகளுக்கு பிரயாணிகளையும், சரக்குகளையும் இயந்திரப்படகுகளில் ஏற்றிச்செல்வதை இலங்கைப் போக்குவரத்துச்சபை பொறுப்பேற்கவேண்டுமென இச்சபை கருதுகிறது" எனக் கோரும் பிரேரணையொன்றை சென்ற 9-ந் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்த ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அது பற்றிப் பேசுகையில் கூறியதாவது:–

என்னுடைய தொகுதி பல தீவுகளைக் கொண்ட ஒரு தொகுதி. இந்தத்தொகுதி ஒரு பிற்போக்கான தொகுதியாகும். மக்கள் வாழ்வதற்கான வளம் அங்கு அதிகம் இல்லை. மக்கள் வாழ்வதற்காகக் கடற்பிரயாணம் செய்யவேண்டியது என்னுடைய தொகுதியிலே அவசியமானதாகும். அங்கு கடல்பிரயாண வசதியில்லாததால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். கடற்கரைகளில் பல நூற்றுக்கணக்கானவர்கள் படுத்துறங்கிக்கொண்டிருப்பதைப் பலசந்தர்ப்பங்களில் நான் கண்டிருக்கிறேன். உணவுக்குத்தானும் பணவசதியில்லாதவர்கள் இரவுநேரங்களில் இவ்விதம் கடற்கரை ஓரங்களில் படுத்துறங்கவேண்டிய நிலையிலிருக்கிறர்கள். லோஞ்சுகள் – அதாவது படகுகள் பிரயாணிகளைக்கொண்டுபோக வேண்டிய இடங்களுக்குக் கொண்டுபோகாததால் மிகவும் கஷ்டப்படுகிறர்கள். சில ஆண்டுகளாக அவர்கள்படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல.

பிரதானமாக நெடுந்தீவு மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறர்கள். இலங்கை போக்குவரத்துச்சபை நிலப்பிரயாணவசதிக்காக மாத்திரமல்ல, கடற்பிரயாண வசதிக்காகவும் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் ஆகையால் இலங்கைப் போக்குவரத்துச்சபை மக்களது பிரயாண வசதிக்குத் தக்க ஒழுங்குகள் செய்யவேண்டும். இப்பொழுது நடைமுறையிலிருந்து வரும் பிரயாண வசதிகள் முறையில்லாமலும் ஒழுங்கில்லாமலும் இருந்துவருகின்றன.

தேசிய சேவைகளின் மந்திரி நான் கூறுபவைகளைக் கிரகிக்கிறரா என்பது எனக்குத் தெரியவில்லை.

மந்திரி சிறிவர்த்தன:– நான் கவனமாகக் கிரகிக்கிறேன்.

திரு. கந்தையா:– நான் தமிழில் பேசுகிறபடியால் என் பேச்சுக்குச் செவிகொடுக்கவில்லையென்று கருதினேன். நான் பேசுவதை அவர் முக்கியமாகக் கேட்பதுடனல்லாமல், நான் என்ன பேசுகிறேனென்பதையும் அவர் அறியவேண்டும். எனவே நான் இனி ஆங்கிலத்தில் பேசப்போகிறேன்.

திரு. யு. பி. வீரசேகரா:– எமக்குக் கேட்கிறது. ஆனல் விளங்கமுடியவில்லை.

திரு. ஷெல்டன் ஜயசிங்க:— இவருக்கு விளங்கும் திறமையில்லை.

திரு. கந்தையா:– எனது தொர்தல்தொகுதி அநேக தீவுகளைக்கொண்டதும், பின்தங்கிய ஒரு பகுதியுமாகும். இங்கு வசிப்பவர்கள் தமது சீவனத்துக்காக வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இப்படிச் செல்வதற்குக்கூட லோஞ்சுகள் வேண்டும். படகுகள் மிகவும் முக்கியமானவை. இப்போது ஒரு சில படகுகள் மாத்திரம்தானுள்ளன. சில தினங்களில் நெடுந்தீவுக்குப் போவதற்குப் படகுகள் கிடைப்பதில்லை.

கையில் பணமில்லாதவர்கள் படகுமில்லாத காரணத்தால் கடற்கரை ஓரங்களில் படுத்துறங்குவதையும் நான் கண்டிருக்கிறேன்.

நெடுந்தீவில் எங்காவது ஒருவர் இறந்துவிட்டால் அவருக்கு இறுதிக்கிரியைகள் செய்ப வேண்டியிருக்கும். இதைச் செய்யாமல் பிரேதத்தை அகற்றும் பழக்கம் இங்கு கிடையாது. கிரியைகளைச்செய்வதற்கும், அதற்கான பொருட்களை வாங்குவதற்கும் கடல் கடந்துதான் செல்லவேண்டும். இதற்குக்கூடப் படகுகள் இல்லை. இதனல் பிரேதங்கள் இரண்டொரு தினங்களுக்கு வைத்திருக்கவேண்டியிருக்கிறது. மக்கள் படும் கஷ்டங்களில் சிலவற்றைத்தான் ஒரு உதாரணத்துக்காக இங்கு கூறுகிறேன்.

அரசாங்கத்துக்கு இக்கஷ்டம்பற்றி எடுத்துக்கூறப்பட்டபோது அது படகுகளைக் கொடுத்திருந்ததுடன் அவைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பை மராமத்து இலாகாவிடம் ஒப்படைத்தது. எதிர்பாராத விதமாக இப்படகுகள் அடிக்கடி 'மக்கர்' செய்துவிடுகின்றன. இவ்வருடத்துக்குக்கூட அரசாங்கம் 'லோஞ்ச்' வாங்குவதற்காக இரண்டுலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. ஆனல் இன்னும் அதை வாங்கியபாடில்லை. நிர்வாகம் சுத்தமோசம். கூட்டுறவுச் சங்கங்களே லோஞ்சுகளைப் பராமரிக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் எப்படியாக இயங்க வேண்டுமோ அதே அளவில் வடபகுதியில் இவைகள் இயங்கவில்லை.

கௌரவ அங்கத்தவர் ஒருவர்:– ஒரு சில மாத்திரம்.

திரு. கந்தையா:– இந்த லோஞ்சுகளை நிர்வகித்துவந்த கூட்டுறவுச்சங்கத்துக்கு இப்போது ரூபாய் 6000 கடன் வந்துவிட்டது. சீரானமுறையில் போக்குவரத்தை நடத்தாததே இந்த நஷ்டத்துக்குக் காரணம். இந்த நிலையைத் தவிர்க்க இலங்கைப் போக்குவரத்துச்சபை தீவுப்பகுதிகளின் போக்குவரத்தைமேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை உடனடியாகச் செய்யமுடியாவிட்டால் இப்பகுதி மக்களுக்கு கட்டாயமாக உதவியளிக்கப்படுமெனக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டாலும்போதும்

திரு. வி. என். நவரத்தினம்: நான் பிரேரணையை ஆமோதிக்கிறேன்.

திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா (நிதி அமைச்சரும், பிரதம அமைச்சரதும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரதும்

(2ம் பக்கம் பார்க்க)

---

## கரவெட்டி கொலை வழக்கு

மாவிட்டபுரம், செவ்வாய்

சென்ற மாதம் 24-ம் திகதி கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஐம்பது வயது நிரம்பிய கந்தப்பு கைம் பெண் கண்ணகை என்னும்மூதாட்டியை வாளால் வெட்டிக் கொலை செய்ததாக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த கந்தர்வீரகத்தி என்பவர் மேல் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை பொலிசாரால் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காலஞ் சென்றவரின் மருமகனை சின்னத்தம்பி கந்தப்பு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:–

காலஞ்சென்றவர் எங்களுடைய வயலில் மாடுமேய்துக் கொண்டு அங்கு உள்ள கொட்டிலில் வசித்து வந்தார். அவருக்கு காலையும் மாலையும் நாங்கள் உணவு கொண்டு போய்க்கொடுத்து வந்தோம். 25-ம் திகதி காலை எட்டு மணியளவில் நான் சாப்பாடு கொண்டுபோனேன். அப்பொழுது மாமியாரை வயல் கொட்டிலில் காணவில்லை. நான் அவரைத்தேடினேன். அவர் கரவெட்டி கிழக்கு விராலி வாய்க்காலில் அதாவது தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் பக்கமாக பலத்த வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தார்.

காலஞ்சென்றவரின் மகள் சரஸ்வதி சாட்சியமளித்தார்.

செல்லத்துரை கைம்பெண் வள்ளியம்மை சாட்சியமளிக்கையில், 24-ம் திகதி மாலை 5 மணியளவில் எங்களுடைய வயலில் புல் பிடுங்கிக் கொண்டு வீடு திரும்பும் வழியில் தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் பக்கம் யாரோ "ஐயோ ஐயோ" எனக் கத்தும் சத்தம் கேட்டதென்றும் அந்தப்பக்கத்தில் கள்வர் உலாவுகிறபடியால் தான் பயந்து அவ்விடம் போய்ப் பார்க்கவில்லையென்றும் கூறினர்.

கட்டையன் கணபதி சாட்சியமளிக்கையில்நான் வயலுச்குப் போய்விட்டுவீடு திரும்பும்வழியில்குளத்தில் மீனும்பிடித்துக் கொண்டு வீடுதிரும்பினேன். அப்பொழுது 50 யார் தூரத்தில் எதிரியும் காலஞ்சென்றவரும் தர்க்கப்படுவதைக் கண்டேன். காலஞ் சென்றவர் எதிரியை நோக்கி 'உனக்கும் எனக்கும் என்னடாகதை' என்று கேட்டார். அதற்கு எதிரி என்னவோ சொன்னர் அது எனக்குக் கேட்கவில்லை எதிரி அப்போது கையில் பொல்லுப்போல் ஒன்று வைத்திருந்தார். அது என்னவென்று எனக்குத் தெரியாது. பிறகு நான் அவ்விடம் நிற்கவில்லை" என்று கூறினர்.

நடராசா விஞயகமூர்த்தி சாட்சியமளித்த பின் நீதிபதி மேல் விசாரணையை ஒத்திவைத்து எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி திரு கே. குமார் வழக்கை நடத்தினர். எதிரி தரப்பில் புரக்டர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. கே. இராசரத்தினம் ஆஜரானர்.

## அக்கரைப்பற்றில் வள்ளுவர் விழா

அக்கரைப்பற்று, புதன்

"அக்கரைப்பற்றுப் பகுதியின் சரித்திரத்திலே திருவள்ளுவர் நினைவு விழாவை இன்றுதான் கொண்டாடுகிறோம். திருவள்ளுவர் யார் என்று பாமர மக்கள் கேட்கும் நேரத்திலே விபுலானந்த சபையினர் வள்ளுவர் விழாவைக் கொண்டாடுவது பொருத்தமுடையதாகும். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்ற தலைப்பால் உலகம் ஓர் ஒப்பற்ற கவிஞனைப் பெற்றது. தமிழ் அன்னை ஓர் சிறந்த அறிஞனைக் கண்டாள். தமிழர்கள் நிறைந்த கருத்துச் செல்வத்தைப் பெற்றார்கள். ஒவ்வொருவரும் அவர்கள் தோற்றிய இனத்துக்கு மொழிக்கு குறைந்தளவு சேவையாவது செய்துதானாகவேண்டும். அப்போதுதான் அவர்கள் முழு மனிதர்களாகக் கருதப்படுவார்கள். வள்ளுவன் தன் கடமையைச் சிறப்பாகச் செய்தான்; இன்று மக்கள் இதயங்களிலே மலர்ந்திருக்கின்றான்." இவ்வாறு அக்கரைப்பற்று விபுலானந்தசபையினரால் விபுலானந்த மணிமண்டபத்தில் நடத்தப்பட்ட திருவள்ளுவர் நினைவு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ஸ்ரீலஸ்ரீ சு. கு. ஆறுமுகதேசிகர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் "வள்ளுவர் எல்லாச் சமயத்தவர்களுக்கும் பொதுவானவர். அவர் எச்சமையம் என்று எவராலும் கண்டுபிடிக்கமுடியாத நிலையில் இருக்கிறார். அது ஒன்றே வள்ளுவரின் பெருமையை விளக்க ஒரு உதாரணமாகுமென்றார்." சபையின் பொதுச் செயலாளர் திரு. எஸ். சிவஞானமுத்தி, திரு மு. சிவநாதபிள்ளை ஆகியோரும் பேசினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வெள்ளி 25-5-62

காலை 6 45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை. 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 7-45 வி. எஸ். ஞானசுந்தரம்-பக்திப் பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 புறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 கோவில்அஞ்சல், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 எஸ். விஞசித்தம்பி-கதாப்பிரசங்கம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்பு, 7-30 சிதம்பரம் டி. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை-நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 குரல்இசை, 1-50 வாத்திய இசை, 2-10 கே. சந்திரசேகரன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செம்மங்குடிஆர். ஸ்ரீனிவாசய்யர்-பாட்டு, 9-15 பலகணி, 9-30 மெல்லிசைக் கதம்பம், 9-45 இசைமாலை.

## மேல்மாகாண தமிழாசிரியர் சங்க கலை விழா

கொழும்பு, வியாழன்

மேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் கலைவிழா வரும் சனிக்கிழமை கொழும்பு கொட்டாஞ்சேனை அர்ச். பெனடிக்ற் கல்லூரியில் கொண்டாடப்படவிருக்கிறது.

இவ் விழா வித்தியாதிகாரி திரு. வி. துரைசிங்கம், பாலர் பகுதி வித்தியாதரிசினி திருமதி கி. துரைசிங்கம் ஆகியோரின் தலைமையில் நடைபெறும். நடனம், பாட்டு, நாடகம், கிராமிய நடனம், பரத நாட்டியம், காவடி ஆட்டம் போன்றவைகள் இவ்விழாவில் இடம் பெறும்.

---

## மடுமாதா திருநாள் ஏற்பாடுகள்

மன்னார், புதன்

மடுமாதவின் வருடாந்த திருவிழாவைமுன்னிட்டுஒருஆலோசனைக்கூட்டம்மன்னார் அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெயரத்தினவின் தலைமையில் நடைபெற்றது.

வணக்கத்துக்குரிய டாக்டர் ஜே. எமிலியானுஸ்பிள்ளை, யாழ்ப்பாண பிஷப். வண. பிதா மவுலி, மன்னார் எம். ஓ. எச். டாக்டர். சோமசேகரம், மன்னார் பொலிஸ் சூப்பிரிண்டன் திரு. எம். சீ. மகாமூர், மாந்தை டி. ஆர். ஓ. திரு. ஏ.எம். எம். குலநாயகம். முதல் மணியகாரர் திரு. என். பூரணலிங்கம், இ. போ. ச. மாவட்ட மனேஜர் திரு. ஜி. விக்கிரமநாயகா. அனுராதபுரம், சுகாதார என்ஜினியர் திரு. ஜி. ஆர். வைஹன்ட் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## பூநகரியில் வள்ளுவர் விழா

சாவச்சேரி, புதன்

"தமிழ்த் தாய்க்குத் தொண்டுசெய்த பெரியார்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளவர் திருவள்ளுவராவர். அவர் செய்த திருக்குறள் இன்றும் என்றும் எல்லாராலும் ஏற்கக் கூடியதாய் விழங்குகிறது" என்று பூநகிரி நல்லூர் அரசினர் பாடசாலையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. டி. எம். சுவாம்பிள்ளை கூறினார்.

திரு. எஸ். முத்தையா "அறிவமுதம்" என்னும் பொருள்பற்றியும் திரு. கே. கந்தசாமி "குறட் பெருமை" என்னும் விஷயம் பற்றியும், செல்வி பூமணி, செல்வத்துரை "தமிழன் திருக்குறள் மயமாக வேண்டு"மென்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினா.

---

## க்ஷயரோக நிவாரண சங்கக் கூட்டம்

பருத்தித்துறை, செவ்வாய்

இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்க வடமராட்சிக் கிளையின் 6-வது வருடாந்தக் கூட்டம் சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்துக்கென அரசாங்கம் ரூபா 8700 உதவியுள்ளதெனவும் இதில் குடியிருப்பு வசதிகளுக்கு 7000 ரூபாவையும் ஒதிக்கி வைப்பதெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளதெனத் தலைவர் தமது தலைமையுரையின் போது குறிப்பிட்டார்.

## ஞானசம்பந்தர் தினம்

யாழ்ப்பாணம், வியாழன்

"திருஞானசம்பந்தர் ஒவ்வொரு கணப்பொழுதும் இறைவனை நினைத்தார். இறை வாழ்வு வாழ்ந்தார். இறைவன் வாழ்ந்தாரோ, சம்பந்தர் வாழ்ந்தாரோ என்றதிசயிக்கும் வண்ணம் தெய்வீக வாழ்வு வாழ்ந்தார். இறைவனுடைய அடியார்களுக்கு எவ்வித தீமையும் சம்பவியாது நாள் கோள்களினல் நலிவு ஏற்படாது என்பதை சம்பந்தர் நிரூபித்துக் காட்டினர். இவ்வகையான இறையருள் பெற்ற ஞானசம்பந்தரின் அற்புதங்களை நாம் இன்று நினைத்து பூஜித்துவரின் எமது வாழ்வு மலர்ச்சியையடையும்"

பெருமாள் கோவிலடி ஆங்கில வித்தியாசாலை இந்து மாணவர் மன்றச் சார்பில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் தின வைபவத்தில் சொற்பொழிவாற்றுகையில் பண்டிதர் திரு. செ. சிவப்பிரகாசம் மேற்கண்டவாறு கூறினார். இந்து மாணவர் மன்றத் தலைவர் திரு. சி. செல்லத்துரை தலைமைவகித்துப்பேசும்போது இவ்வகையான பெரியார்களைப் பற்றி மாணவர்கள் சிந்திக்கும்போது வாழ்வு சிறந்து மேலான பக்தர்களாகவும், குணசீலராகவும் வாழலாம் என்றார்.

---

## திருவிழா முடிவடைந்தது

பருத்தித்துறை, சனி

துன்னாலை வடக்கு அல்லைப் பெற்றான் முருகமூர்த்தி ஆலயம், துன்னாலை தெற்கு நுணுவில் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் தொடர்ந்து நடைபெற்று வந்த வருடாந்த உற்சவங்கள் இன்று நடைபெற்ற தீர்த்தத்திருவிழாவுடன் முடிவடைந்தன.


கெட்டியான உணவு அருந்துவதற்கு

உங்கள் குழந்தையை சிறந்த முறையில் பழக்கிவிட்டீர்களா?



அப்படியாயின் நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டியவை இவையே

★ ஐந்து மாதங்களுக்குப்பின் தாமதிக்காது கெட்டியான உணவைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

★ உணவைமாற்றும் பொழுது படிப்படியாக மாற்ற வேண்டும்.

★ நன்ருகச் செரிக்கக்கூடிய கெட்டியான உணவை முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்தான் அநேகமாக கெட்டியான உணவு சேர்த்துக் கொள்ளவேண்டிய காலம். 50வருடங்களுக்கு மேலாக பார்லீஸ் தான் பாலுடன் சேர்த்து ஊட்டக் கூடிய கெட்டியான உணவும் இலகுவில் செரிக்கக் கூடியதும் என தாய்மார்கள் உணர்ந்து வந்துள்ளார்கள்.

பார்லீஸ் தானியப்பொருள்கள், கனிப் பொருள்கள் விட்டமின் சத்து இவை சமமாக உடைய உணவு. இந்த உணவு மிகவும் இலகுவாக செரித்துவிடும்.

பார்லீஸ் தயாரிப்பதற்கு மிகவும் இலகுவானது. சூடான பாலுடன் கலக்கவேண்டியது. அவ்வளவுதான்.

**பார்லீஸ்**
குழந்தைகளின்
முதல் கெட்டியான உணவு

# 'நூல் நிலையம் சகல மக்களுக்கும் உதவ வேண்டும்'

## யாழ்விநோத பொருட்காட்சியில் திரு. ஸாம் சபாபதி பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையம் யாழ்ப்பாணத்துத் தமிழர்களுக்கு மட்டும் உதவுவதாக இல்லாமல் இலங்கையிலுள்ள சகல மக்களுக்கும் உதவுவதாகச் செய்வதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். இந்த பொதுசன நூல் நிலையம் நன்கு வளர்வதற்கு பொதுமக்கள் பெரிதும் ஆதரவுகொடுக்கவேண்டும்."

இவ்வாறு நேற்று மாலை யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையக் கட்டட நிதிக்காக ஏற்படுத்தப்பட்ட யாழ். விநோத விவசாயத் தொழில் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் திரு. ஸாம். ஏ. சபாபதி குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில் நூல் நிலைய வளர்ச்சிக்கு உதவிபுரிந்த பெரியார்களுக்கு யாழ்ப்பாண பொதுமக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவார்கள் என்றும் அறிவையும் கலையையும் வளர்க்க நூல்நிலையம் அரிய தொண்டாற்றவேண்டும் என்றும் தெரிவித்தார்.

திரு. ஸாம் சபாபதியை வரவேற்றுப் பேசிய யாழ் மாநகர சபை அங்கத்தவர் திரு. டி. எஸ். துரைராஜா கூறியதாவது:

நூல்நிலைய வளர்ச்சியில் பெரும்பங்குகொண்டு உழைத்த ஒரு அங்கத்தவர் என்ற முறையிலேயே திரு. ஸாம் சபாபதி இந்தப் பொருட்காட்சியைத் திறந்துவைக்க வேண்டுமென நாம் விரும்பினோம். இந்த நூல்நிலையம் மேலும் வளர்ந்து நல்ல சேவை செய்யும்வகையில் பொதுமக்கள் எல்லோரும் ஆ[illegible]வுதர வேண்டும்."

யாழ்விநோத விவசாய கைத்தொழில் பொருட் கர்ட்சி இம்முறை முன்னிலும் பார்க்க சிறப்பாக அமைந்துள்ளது.

நிறைவுநும் தறுவாயில் நிற்கும் நூல்நிலையத்துக் கருகாமையில் அமைந்த இந்தப் பொருட் காட்சியில் பல நல்ல விஷயங்களை பொதுமக்கள் பார்க்கக் கூடியதாக விருக்கிறது. விவசாயத்துக்கு வேண்டிய விஷயங்களும் கைத்தொழில் துறைக்கு வேண்டிய, விஷயங்களும் கலையம்சம் நிறைந்த பொருள்களும கருத்துக்கும் கண்ணுக்கும் விருந்தளிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

## இரு கோர விமான விபத்துக்கள்

சிக்காகோ, மே 23

சிக்காகோவுக்கும் கன்ஸாஸ் நக்ருக்குமிடையே சென்ற ஒரு போயில் விமானம் விபத்துக்குள்ளாகியதால் 40 பிரயாணிகள் மாண்டனர்.

## கொதி தண்ணீரை விசினராம்

யாழ்ப்பாணம், வியாழன்

கொட்டடியிலுள்ள தேநீர்க் கடையொன்றில் ஒருவர் கொதி தண்ணீரைக் கடைக்காரரின் முகத்தில் விசிவிட்டு ஓடிச் செல்லும் வழியில் ஒரு சோடாப் போத்தலை விசியபோது அது ஒரு குழந்தைமீது பிடித்ததனல குழந்தையின் முகத்தில் படுகாயம் ஏற்படுத்தியது. குழந்தை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு குழந்தையின் முகத்தில் தையல் போடப்பட்டதாகத் தெரிகிறது.

## எல்லைக்காந்தி காவல் நீடிப்பு

ராவல்பிண்டி, மே 23

எல்லைக்காந்திகான் அப்துல் கபார்கானை காவலில் வைத்திருக்கும் காலஎல்லையை இவ்வருடம் அக்டோபர்மாதம் 10ம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கை கூறுகிறது.

1961ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எல்லைக்காந்தி கைது செய்யப்பட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

---

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த விமானமொன்று நேற்று பிராங்போர்ட்டுக்குச் சமீபத்தில் பறந்து கொண்டிருக்கையில் திடீரென தீப்பிடித்து வெடித்துத் துண்டுகளாக விழுந்தது விமானத்திலிருந்த நான்கு கடற்படை அதிகாரிகளுட்பட 26 பேர்களும் மாண்டனர்.

# தோட்டங்களில் இலங்கையரை வேலைக்கமர்த்தும் மசோதா

## பார்லிமெண்டில் மந்திரி சமர்ப்பித்தார்

கொழும்பு, புதன்

பார்லிமெண்ட் இன்று மாலை உப சபாநாயகர் திரு. ஹியூ. பெர்னண்டோ தலைமையில் கூடியபோது, தொழில் தேசிய சேவை மந்திரி திரு. எம். பி. டி' இசட். சிறிவர்தன இலங்கையர்களுக்கு தோட்டங்களில் வேலை அளிப்பது சம்பந்தமான ஒரு மசோதாவைச் சமர்ப்பித்தார்.

இம்மசோதா, தோட்டங்களில் எத்தனை இலங்கையரை வேலைக்கமர்த்தலாம் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மந்திரிக்கு அளிக்கிறது.

இச்சட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு தொழிற் கமிஷனருக்கு இருக்கும். அவசியமான போது குறிப்பிட்ட தகவல்களையும் விளக்கங்களையும் சமர்ப்பிக்குமாறு தொழிற் கமிஷனர் தோட்ட முதலாளிமார்களைக் கோரும் அதிகாரத்துக்கும் மசோதாவில் வழி செய்யப்பட்டிருக்கிறது. தொழிற் கமிஷனர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் தோட்டத்தில் பிரவேசித்து எந்த ஒரு தொழிலாளியையும் பரிசோதனை செய்ய மசோதாவில் இடமளிக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தை மீறுபவர்களுக்கு ரூ 500-க்கு மேற்படாத அபாரதமும், 6 மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையும் விதிக்க முடியும்.

திரு. தஹநாயக்காவின் கேள்வி ஒன்றுக்கு உதவி நிதி மந்திரி திரு.கருணாரத்ன பதிலளிக்கையில் சிறைக் கைதியான எட்டி பெரேரா அபின் சட்டத்தின் கீழ் 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் பத்தாண்டு கடும் காவல் தண்டனை விதிக்கப்பட்டார் என்றும் 4தடவை அவருக்குத் தண்டனை குறைக்கப்பட்டதென்றும், அதன் பின் அவர் விடுதலை செய்யப்பட்டார் என்றும் கூறினர். 5 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கபபட்ட பி. ஆர். பெரேரா, 7 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட டி. ஜே. கே. ஒபேசேகரா ஆகியோர் 1961-ம் ஆண்டு மே மாதம் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் கூறினர்.

"இவ்விதம் நான்கு தடவைவைகள் தண்டனை கிடைக்கப்பட்ட கைதிகள் இன்னும் எத்தனை பேர்" என டாக்டர் நாகநாதன் கேட்டார்.

திரு. கருணாரத்ன "இங்குள்ள தகவல்களைக் கொண்டு அதற்குப் பதிலளிக்கமுடியாது நீங்கள் சிறைக்குப்போய், நன்னடத்தைடன் நடந்து கொண்டால் நாலில் ஒரு பங்கு தண்டனைக் குறைப்பைப்பெறுவீர்கள்"

டாக்டர் நாகநாதன்: "தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தான் நாங்கள் சிறைக்குப் போவோம்"

## கருவாடு விநியோகம் ஆராயப்படும்

கொழும்பு, புதன்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் கருவாட்டுப்பகுதி செயல்படுவிதத்தை ஆராயும்படி வர்த்தக உணவுக் கப்பல் அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை உணவு இலாகாவைக் கேட்டிருக்கிறார்.

கருவாட்டின் இறக்குமதி விறபனை முதலியவற்றில் நடைபெற்ற ஊழல் பற்றி அமைச்சரிடம் எம். பிக்களும் மக்களும் முறையிட்டதைத தொடந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## 3-ம் திட்டத்துக்கு 320 லட்சம் பவுன் கடனுதவி

புதுடில்லி, மே 23

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மேலும் 320 லட்சம் பவுன் கடன் அளிக்கும் ஒப்பந்தத்தில் பிரிட்டன் இன்று கைச்சாத்திட்டது. பிரிட்டன் மொத்தம் 9 கோடி பவுன் கடனளிக்கும். 25 ஆண்டுகளில் இக்கடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

## விசாரணை நடத்த உத்தரவு

புதுடில்லி, மே 23

கல்கத்தாவுக்கருகே நடைபெற்ற ரயில் விபத்துப்பற்றி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## அல்ஜீரியாவில் நேற்று 27 கொலை

அல்ஜயர்ஸ், மே 23

அல்ஜீரியாவில் நேற்று நடைபெற்ற பலாத்கார சம்பவங்களில் 27பேர் கொல்லப்பட்டனர். இவர்களிற் பெரும்பாலோர் அல்ஜீரியர்கள். ஐவர் பெண்கள்.

## பாகிஸ்தானியர் மீது நடவடிக்கை

புதுடில்லி, மே 23

கேரளத்தில் பிரவேசித்த 177 பாகிஸ்தான் பிரஜைகளில் 22 பேர் வெளியேறினர்கள் என்னும், 5 பேருக்கு வெளியேற்ற நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், 10 பேர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது.

## சியாராலியோன் பொதுத்தேர்தல்

லண்டன், மே 23

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் விடுதலையடைந்த சியாராலியோன் நாட்டின் முதலாவது பொதுத்தேர்தல் வாக்களிப்பு இன்று ஆரம்பமாகிறது.

## கிழமை முடிவில் கிரிக்கட் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கத்தினல் நடாத்தப்பட்டு வரும் 2-ம் பிரிவுக் கிரிக்கட் போட்டிகள் மிகவும் ஊக்கத்துடன் விளையாடப்பட்டு வருகின்றன.

இவ்வார இறுதியில் விளையாட இருக்கும் பாடசாலையின் விபரங்கள் பின்வருமாறு:-

1. யாழ். இந்துக் கல்லூரியுடன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விளையாடுகிறது.
2. யாழ். மத்திய கல்லூரியுடன் யூனியன் கல்லூரி விளையாடும்.
3. கொக்குவில் இந்துக்கல்லூரியுடன் கந்தவரோதயாக் கல்லூரி விளையாடுகிறது.

இப்போட்டிகளுக்கு யாழ்ப்பாணக் கிரிக்[illegible] மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ______

கல்லூரி ______

எனது பெயர் ______

விலாசம் ______

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

இப்பொழுது திரையிடப்படுகிறது
கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசன்ட் (புத்தளம)



ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்
எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா
பத்மினி பிரியதரிசனி
நடித்த
இரத்தினபுரி இளவரசி
டைரக்ஷன்: ராமண்ணா

5வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் 10 திரைகளில்
சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
பண்டரிபாய் - பாலாஜி
நடித்த
அன்பு எங்கே?

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.